DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
ROYAL LEPAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

FIRST MORTGAGE
SECOND MORTGAGE
REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1578 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 3, 2026

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
HomeLife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship.
Super visa for parents and grandparents including health insurance.
Citizenship.
Permanent resident card renewal.
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# கனடா தினத்தன்று ஸ்காபுறோ வைத்தியசாலைக்கு 5 இலட்சம் டாலர்களையும் வழங்கியும் முதியோர்களுக்கு இலவச உணவளித்தும் மகிழ்ந்த வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார்

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற "சரவணபவன்" சைவ உணவகத்தின் நூற்றுக்கணக்கான கிளைகள் உலகெங்கும் இயங்கிவருகின்றன.

அவற்றுள் நான்கு "சரவணபவன்" கிளைகளை கனடாவில் நிர்வகித்து வருபவரும் வர்த்தகத்துறை முன்னோடியும் சகோதரர் கணேசன் சுகுமார் அவர்கள் தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் கனடாவிலும் பொது வைத்தியசாலைகள் மற்றும் ஆலயங்கள் -பொது அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு தாரளமாக நிதி அன்பளிப்புக்களை வருபவர் ஆவார்.

அந்த வரிசையில் புதன்கிழமை 01-07-2026 கனடா தினத்தன்று சரவணபவன் ஸ்காபுறோ கிளையில் ஸ்காபுறோ பொது வைத்திசாலைக்கு 5 இலட்சம் கனடிய டாலர்களை அன்பளிப்புச் செய்தும் ஆயிரக்கணக்கான முதியவர்களான பெரியோர்களுக்கு உணவும் தேநீரும் வழங்கியும் கனடா தினத்தை தனது வாடிக்கையாளர்களோடும் அரசியல் பிரமுகர்களோடும் கொண்டாடி மகிழ்ந்தார்.

இங்கே காணப்பெறும் படத்தில் ஸ்காபுறோ பொது வைத்திசாலைக்கு 5 இலட்சம் கனடிய டாலர்களை அன்பளிப்புச் செய்யும் வகையில் "மாதிரிக் காசோலையை" அரசியல் பிரமுகர்கள் மற்றும் தனது பணியாளர் சகிதம் கையளிப்பதைக் காணலாம். (படம்: யுகம் வானொலி)

(தொடர்ச்சி 10ம் பக்கம்)




# CANADA DAY celebrations hosted by Markham - Thornhill MPP Logan Kanapathi

# Markham - Thornhill மாகாண தொகுதியின் அங்கத்தவர் லோகன் கணபதி நடத்திய கனடா தின ஒன்றுகூடல்



**Markham - Thornhill** மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவரும் அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்கள் நடத்திய கனடா தின ஒன்றுகூடல் கடந்த 29-06-2026 அன்று திங்கட்கிழமை மார்க்கம் நகரில் 15 **Simonston Blvd. Markham** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Simonston** பூங்காவில் சிறப்பாக ஏற்பாடு செய்ய்பெற்றிருந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் நலன் விரும்பிகளும் அங்கு கலந்து கொண்டு அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் உணவு உபசாரங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தனர்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada Rajasundran
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON. L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

SMART RESTORATION
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

# Happy Canada Day

நாம் ஒன்றிணைந்து உருவாக்கிய நாட்டின் பெருமையையும் அதன் வளமான எதிர்கால நம்பிக்கையையும் கொண்டாடும் நாள் இது.
ஒன்டாரியோ முழுவதும் நமது சமூகங்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பங்களிக்கும் அனைவருக்கும் நன்றிகள்!
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த இனிய கனடா தின நல்வாழ்த்துக்கள்!



LOGAN KANAPATHI
MPP for Markham–Thornhill
PA to the Minister of Red Tape Reduction
NEED HELP WITH A PROVINCIAL ISSUE? CONTACT ME!

TEL: 905 - 305 - 1935
E-MAIL: LOGAN.KANAPATHICO@PC.OLA.ORG
WEBSITE: WWW.LOGANKANAPATHI.CA
ADDRESS: 7380 MCCOWAN ROAD, UNIT3, MARKHAM, ON L3S 3H8
Logan_Kanapathi Logan Kanapathi
logankanapathi LoganKanapathi



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.




Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24








Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 - Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca - email: Uthayannews@yahoo.com




# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.
அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.
இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.
இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.
நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ன.
முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது
கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.
சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.
அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.
இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்!

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு



Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்)
அமெரிக்காவில் உள்ள உயர்தர உணவகம் ஒன்றிக்கும் அனுபவமுள்ள Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) ஆகியோர் தேவை.
விண்ணப்பதாரர்கள் கனடிய குடியுரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
அத்துடன் தமிழ்-மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களாக இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். தென்னிந்திய மற்றும் மேற்கிந்திய உணவுகள் தயாரிப்பதில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.
WhatsApp Text Messages மூலம் தயவு செய்து விண்ணப்பங்களை அனுப்பவும்.
அதில் கீழ்க் கண்ட விபரங்களையும் இணைக்கவும்: விண்ணப்பதாரியின் வயது, திருமண நிலை, மற்றும் தொலைபேசி எண்.
விண்ண்ப்பம் அனுப்பவேண்டிய எண்: (937) 475-5992

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அநுரவுக்கும் கோட்டாவிற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய கதியே ஏற்படும்



## பத்தரமுல்ல சீலரத்ன தேரர் பகிரங்க எச்சரிக்கின்றார்!

தேசிய மக்கள் சக்தி அரசு தனது அகந்தையைத் தூக்கியெறிந்துவிட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும் என்றும், இல்லையெனில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்த கதியே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஏற்படும் என்றும் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசானது, எதிர்வரும் தேர்தல்களில் அரச ஊழியர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதை மாத்திரமே இலக்காகக் கொண்டு, அரிசி விநியோகத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அரச ஊழியர்களுக்கு தலா 20 கிலோகிராம் அரிசியை வழங்குவதற்கு இந்த அரசுக்குப் பைத்தியம் பிடித்துள்ளது போலும். இவ்வாறான பைத்தியக்காரத்தனம் உலகத்தில் எங்குமே இல்லை.



அழகான, தூய்மையான, பெரும் பணக்கார இலங்கையைக் கட்டியெழுப்பப் போவதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்தவர்கள், இன்று அரச ஊழியர்களுக்கு 20 கிலோகிராம் அரிசியை வழங்கவா நாட்டை ஆட்சி செய்கின்றார்கள்? தற்போது நாடு அவ்வாறான நிலையை அடைந்துள்ளதா? அவ்வாறாயின் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணங்கள் எங்கே? சர்வதேச நாணய நிதியத் திடமிருந்தும் ஏனைய கடன் உதவிகள் மூலமும் பெறப்பட்ட நிதிகளுக்கு என்ன நடந்தது? அவை எதற்கும் இந்த அரசிடம் பதில் இல்லை.

அரசுக்கு அரச ஊழியர்களின் பசியைப் பற்றி மாத்திரமே கவலை உள்ளது. ஏழைக் கிராமங்களில் வாழும் ஏனைய மக்களுக்குப் பசி இல்லையா? அவர்கள் உணவு உண்பதில்லையா? அல்லது அவர்கள் புண்ணாக்கா உண்கின்றார்கள்? அரச ஊழியர்களின் வாக்குகளைக் குறிவைத்தே இந்த அரசிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அரச ஊழியர்கள் அந்தளவுக்குப் பிச்சைக் காரர்கள் அல்லர், ஆனால் இந்த அரசு அவர்களைக் கையேந்திப் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஏழைக் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப் புவதற்கோ அல்லது விவசாயிகளிடமிருந்து நெல்லை முறையான விலைக்குக் கொள்வனவு செய்வதற்கோ அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசு உடனடியாக மக்களின் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால், மக்கள் அனைவரும் வீதிக்கு இறங்கிப் போராடுவது நிச்சயம். அன்று கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குப் போகுமாறு கூறியதைப் போல், அநுரகுமார திஸாநாயக்கவையும் வீட்டுக்குப் போகுமாறு கூறி மக்கள் வீதிக்கு இறங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை." - என்றார்.

# செம்மணியில் "உரிமைப்பந்தம்" அமைதிப் போராட்டத்தில் திரண்ட மக்கள் 427 தீப்பந்தங்கள் ஏந்தி உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தினர்!



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி, "மக்கள் செயல் அமைப்பின்" ஏற்பாட்டில் "உரிமைப்பந்தம்" எனும் அமைதி வழி மக்கள் எழுச்சிப் போராட்டம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை செம்மணி பகுதியில் உள்ள அணையா விளக்குத்திடலில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், அங்குள்ள அணையா விளக்கு தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதுடன் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.





செம்மணி மனிதப் புதைகுழியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வுப் பணிகளில் இதுவரையில் 412 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுடன், கடந்த 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட அகழ்வுப் பணிகளின் போது மீட்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளையும் சேர்த்து, மொத்தமாக அடையாளம் காணப்பட்ட 427 எலும்புக்கூடுகளை நினைவுறுத்தும் வகையில் 427 தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த உணர்வுபூர்வமான நிகழ்வில், கடத்தப்பட்டு மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டு தங்களது நீதிக்கான குரலை எழுப்பினர்.




# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அநுரவின் அரசு மீறக் கூடாது!

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவரும் முயற்சிக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கண்டனம்

தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவை மாகாண அமைச்சின் ஊடாக விரிவுபடுத்த வேண்டுமே தவிர, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையையும் சேர்த்து மத்திய அரசின் கீழ் கொண்டுவரும் முயற்சிகள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக தேசிய மக்கள் சக்தி அரசின் செயற்பாடுகள் அமையக் கூடாது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் 29ம் திகதி அன்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந்த் மேலும் கூறுகையில்:-

"தேசிய மக்கள் சக்தி அரசுக்குக் கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களும் வாக்களித்திருந்தனர். புதிய அரசு தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நம்பியே தமிழ் மக்கள் இந்த ஆதரவை வழங்கியிருந்தனர். குறிப்பாக, மாகாண சபையின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது என்பதே அவர்களின் பிரதான வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது.

ஆனால், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சில விடயங்கள் மிகவும் நாசுக்கான முறையில் மாகாண சபை அதிகாரங்களைப் பலவீனப்படுத்தும் திட்டத்தோடு அரங்கேற்றப்படுகிறதோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஒருவகையில் மக்களின் இந்த சந்தேகத்தில் உண்மையும் இருக்கின்றது.

கடந்த கால வரலாறுகளை உற்று நோக்கினால், இவ்வாறு மாகாண சபையின் அதிகாரங்களை மத்திய அரசு தன்வசப்படுத்த பல முயற்சிகளை முன்னெடுத்த சூழல்கள் உருவான போதெல்லாம், அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் சாணக்கியத்தால் அவற்றை தடுத்து நிறுத்தியிருந்தார். அத்துடன், மாகாண அரசின் ஊடாகவே அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அவர் வழிவகை செய்திருந்தார்.

ஆனால், இன்று அவ்வாறானதொரு வலுவான அரசியல் ஆளுமை தமிழ்த் தரப்பின் மத்தியில் இல்லாதுள்ளமையின் வெளிப்பாடே, மத்திய அரசு மாகாண அதிகாரங்களை நாசுக்காகக் கையில் எடுக்கும் இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளது." - என்றார்.

# யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் நியமனம்!



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்கள் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் ஆனி மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார்.

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப்பணியாற்றியுள்ளதுடன் உரோமில் இறையியல் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைப் பட்டத்தையும் கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமானி, கலைமானி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 2020ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டதுடன் 2024ஆம் ஆண்டு ஆவணி 19ஆம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் நியமனம் பெற்று பணியாற்றிவருகின்றார்.

தற்போதைய ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் ஓய்வு காரணமாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக பணியாற்றி வந்த இவர் யாழ். மறைமாவட்ட ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தொடர்ச்சியாக இரண்டரை மணி நேரம் பரத நாட்டியமாடி உலக சாதனை படைத்த கிளிநொச்சி சிறுமி ரஜீவன் கம்சத்வனி!

பு. கஜிந்தன்



இரண்டரை மணித்தியாலங்கள் பரத நாட்டியமாடி உலக சாதனை படைத்த சிறுமி!

கிளிநொச்சியைச் சேர்ந்த ரஜீவன் கம்சத்வனி என்ற சிறுமி 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் தொடர்ச்சியாக பரத நாட்டியமாடி உலக சாதனை படைத்துள்ளார். ஆறு வயதுக்குட்பட்ட பிரிவில் ஐந்து வயதான இந்தச் சிறுமி உலக சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனை நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இவரது இந்தச் சாதனை "ராபா உலக சாதனை" புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாதனை நிகழ்வில் நடுவர்களாக, "ராபா உலக சாதனை" புத்தக நிறுவனத்தின் இலங்கை நாட்டுத் தூதுவர் கலாநிதி



யோகதாசன் யூட் நிமலன், "ராபா உலக சாதனை" புத்தக நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் கலாநிதி சிவனேஸ்வரன் விஜிதா ஆகியோர் நடுவர்களாக பணியாற்றினர்.

சாதனையின் பின்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனேஸ்வரனால், "உலக நாட்டிய இளவரசி" என மகுடம் சூட்டி சிறுமி ரஜீவன் கம்சத்வனி கௌரவிக்கப்பட்டார்.

# வெளிநாட்டு அலுவல்கள், வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில், வட மாகாண சுற்றுலாத்துறை மேம்பாடு குறித்து கலந்துரையாடல்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடல் 2ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்றது.

கடந்த ஜூன் 24ஆம் திகதி கௌரவ அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற சுற்றுலா அபிவிருத்தித் திட்டக் கூட்டத்தின் தொடர்ச்சியாக, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயும் நோக்கில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான சுற்றுலாத்துறை தொடர்பான 2027ஆம் ஆண்டுக்குரிய திட்ட முன்மொழிவுகள் விரிவாக ஆராயப்பட்டன. அத்துடன், மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுற்றுலாத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்பட்டது. இதன்போது, வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் குறிப்பாக சுற்றுலாப் பணியகத்தின் ஊடாக நேரடியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஐந்து விசேட திட்ட முன்மொழிவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன், வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கம் தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கூடுதல் கரிசனையுடன் செயற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அமைச்சின் சார்பில் இக்கலந்துரையாடலில் பங்கேற்ற திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் எச்.பி.சோமதிலக, 50 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் கொண்ட திட்டங்களின் திட்ட வடிவமானது கட்டாயமாகத் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நியமங்களுக்கு அமைவாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், முன்மொழியப்படும் அனைத்துத் சுற்றுலாத் திட்டங்களும் துறைசார் சுற்றுலா உபகுழுவிலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும் முறையான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டியது கட்டாயம் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.



கனடிய செய்திகள்
Canadian News

## CANADA DAY BBQ, hosted by Scarborough Agincourt MPP Aris Babikian was graced by thousands of Supporters and Well-wishers'




# Scarborough Agincourt மாகாண தொகுதியின் அங்கத்தவர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின ஒன்றுகூடல்

Scarborough Agincourt மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின ஒன்றுகூடல் கடந்த 28-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை 133 Cass Ave. Scarborough என்னும் விலாசத்தில் அமைந்துள்ள LYNNGATE PARK பூங்காவில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் நலன் விரும்பிகளும் அங்கு கலந்து கொண்டு அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் உணவு உபசாரங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தனர்.

பரதநாட்டியம் - சீனக் கலாச்சார நடனங்கள் மற்றும் ஏனைய இனங்கள் சார்ந்த கலாச்சார நிகழ்வுகள் மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன.

அங்கு உரையாற்றிய Scarborough Agincourt மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவர் அரிஸ் பாபிகியன் அவர்கள் கனடா என்னும் அற்புதமான தேசத்தில் உலகின் பல பாகங்களிலும் பிறந்து வளர்ந்த பல்லின மக்கள் அவர்கள் சொந்த மொழியை பேசுபவர்களாக இருந்தாலும் இந்த நாட்டில் உயரத்தை எட்டக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்பதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும் என்றார். கனடாட உதயன் பிரதம ஆசிரியர் அவர்களும் தனது குழுவினரோடு அங்கு கலந்து கொண்டார்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*





## CANADA DAY celebrations hosted by Markham - Thornhill MPP Logan Kanapathi was celebrated with by thousands of Constituents and Well-wishers'

# Markham - Thornhill மாகாண தொகுதியின் அங்கத்தவர் நடத்திய கனடா தின ஒன்றுகூடல்



Markham - Thornhill மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவரும் அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்கள் நடத்திய கனடா தின ஒன்றுகூடல் கடந்த 29-06-2026 அன்று திங்கட்கிழமை மார்க்கம் நகரில் 15 Simonston Blvd. Markham என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Simonston பூங்காவில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் நலன் விரும்பிகளும் அங்கு கலந்து கொண்டு அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் உணவு உபசாரங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தனர்.

பரதநாட்டியம் - சீனக் கலாச்சார நடனங்கள் மற்றும் ஏனைய இனங்கள் சார்ந்த கலாச்சார நிகழ்வுகள் மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன.

அங்கு உரையாற்றிய Markham - Thornhill மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவர் லோகன் கணபதி அவர்கள் கனடா தேசத்தில் எமது மார்க்கம் நகரின் பிரதேசம் நன்கு அபிவிருத்தியடைந்த ஒரு பிராந்தியமாக மாறி வருகின்றது. கனடாவில் உலகின் பல பாகங்களிலும் பிறந்து வளர்ந்த பல்லின மக்கள் அவர்கள் சொந்த மொழியை பேசுபவர்களாக இருந்தாலும் இந்த நாட்டில் தங்களால் இயன்ற அளவிற்கு வாழ்க்கையிலும் கல்வியிலும் மேன்மையடைய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்பதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும் என்றார். கனடாட உதயன் பிரதம ஆசிரியர் அவர்களும் ஈஸ்ட் எப்எம் 102.7 வானொலி நிலையத்தின் தலைவர் நடா ராஜ்குமார் அவர்களும் தமது குழுவினரோடு அங்கு கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*- Uthayan LJI Journalist Arjune -*






# 05-07-2026 ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள செல்வி சபரீனாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்!

நடன ஆசிரியை தேனுஜா திருமாறன் அவர்களின் மாணவியும் திரு. திருமதி தயானந்தா தம்பதியின் புதல்வியுமான பரதநாட்டியச் செல்வி. சபரீனா தயானந்தா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 05-07-2026 ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் 5183 Sheppard Avenue East என்னும் விலாசத்தில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு செல்வி சபரீனாவை வாழ்த்திச் செல்லுமாறு அவரது பெற்றோர் அழைக்கின்றனர்.

பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற நடைபெற அனைவரும் வாழ்த்துவோம்!









# கொடூரமான படுகொலைகளைச் செய்துவிட்டு குற்றமற்றவர் எனக் கூறுவது வேடிக்கையானது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

## பிள்ளையானின் அத்தனை இரகசியங்களும், பழிவாங்கல் குற்றங்களும் நீதிமன்றத்தில் அம்பலமாகின்றன என்கிறார் அமைச்சர் ஆனந்த விஜேபால

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) என்பவர் கொடூரமான கொலைகளையும், பல்வேறு குற்றச் செயல்களையும் புரிந்தவர் என்றும், அவருக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் நிச்சயம் வழங்கும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பிள்ளையான் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலை வாகனத்துக்குக் கொண்டு செல்லப்படும்போது தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கூறியிருந்தமை பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்,

இது தொடர்பில் அமைச்சர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது: “மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட கொடூரமான படுகொலைகளின் பின்னணியில் பிள்ளையான் இருந்துள்ளார் என்பது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் வெளிவந்துள்ளது. இவ்வாறான கொடூரக் கொலைகளையும் குற்றச் செயல்களையும் புரிந்துவிட்டு, இன்று தான் முற்றிலும் குற்றமற்றவர் என்று அவர் கூறுவது மிகவும் வேடிக்கையானது.



அதிகார பலத்தைப் பயன்படுத்தி அவர் இத்தனை காலம் மறைத்து வைத்திருந்த அத்தனை இரகசியங்களும், பழிவாங்கல் குற்றங்களும் இப்போது நீதிமன்றத்தின் மூலம் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன. சட்டத்தின் முன்னால் யாரும் தப்பிக்க முடியாது. இத்தனை காலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில், பிள்ளையான் புரிந்த குற்றங்களுக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் மிக விரைவில் வழங்கும்.” - என்றார்.

# குற்றச்சாட்டுக்களால் பதவி இழந்த வவுனியா மாநகர முதல்வர் சபையின் செங்கோலை அபகரித்து மேலும் குற்றம் புரிந்தவராக அடையாளம் காணப்பட்டார்

குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பதவியை இழந்த வவுனியா மாநகர முதல்வர் சபையின் செங்கோலை எடுத்துச் சென்று இன்னுமொரு குற்றம் புரிந்தவராக அடையாளம் காணப்பட்டார். இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில்ல முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


வவுனியா மாநகர சபையில் இருந்த அரச சொத்தை மாநகர சபையில் இருந்து பதவி நீக்கப்பட்ட முதல்வரே எந்தவொரு அனுமதியும் இன்றி எடுத்துச் சென்றுள்ளார் என ஆணையாளர் தரப்பால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கின் இரண்டாவது மாநகர சபையாக தற்போது தரம் உயர்த்தப்பட்ட வவுனியா மாநகர சபை யாழ்ப்பாணம் மாநகர சபையில் காணப்படும் செங்கோலை ஒத்த வடிவத்தில் ஓர் செங்கோலை தயார் செய்திருந்தனர். அவ்வாறு செய்யப்பட்ட செங்கோலே முன்னாள் முதல்வரால் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் கடந்த 23ஆம் திகதிய அமர்வின்போது செங்கோல் சேதமடைந்த காரணத்தினாலேயே அதனை எடுத்துச் சென்றதாக முன்னாள் முதல்வரால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இவ் விடயம் நாளை புதன் கிழமை வவுனியாப் பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.





# வவுனியா மாதர்பணிக்க மகிழங்குளத்தில் தொடரும் சட்டவிரோத காடழிப்பு

## குடிநீர் ஆதாரம் மற்றும் யானைகளின் வாழ்விடத்தைச் சிதைக்கும் கொடூரத்தை தடுத்து நிறுத்துமாறு பொ. ஐங்கரநேசன் கோரிக்கை

வவுனியா ஓமந்தை - பாலமோட்டை வீதியில் அமைந்துள்ள மாதர்பணிக்க மகிழங்குளம் பகுதியில் இதுவரையில் 80 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட அடர்ந்த காடு தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமான முறையில் முழுமையாக அழிக்கப் பட்டுள்ளது. அரச காணிகளைக் கூறு போட்டு விற்கும் நோக்கில் இடம் பெறும் இந்த வனக் கொள்ளைக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகளும் துணை போகின்றனர். இது வெறுமனே மரங்களின் அழிவுகள் மட்டுமல்ல் வுனியாவின் குடிநீர் ஆதாரம் மற்றும் யானைகளின் வாழ்விடத்தைச் சிதைக்கும் கொடூரமும் ஆகும். இதன் பாரதூரமான விளைவுகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாதர்பணிக்க மகிழங்குளத்தில் நடைபெற்று வரும் காடழிப்புக் குறித்து பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், வறண்ட வலயமான வவுனியா மாவட்டத்தின் விவசாயமும், குடிநீரும் முற்றிலும் பருவகால மழையையும், அம்மழைநீரைச் சேகரிக்கும் குளங்களையும், நிலத்தடி நீரையும் நம்பியே உள்ளன. மாதர்பணிக்க மகிழங்குளம் போன்ற காட்டுப்பகுதிகள்தான் இயற்கை நீரேந்துப் பகுதிகளாகச் செயற்பட்டு நிலத்தடி நீர்மட்டத்தைப் பேணுகின்றன. தற்போது இப்பகுதியில் 80 ஏக்கர்களுக்கும் மேலாகக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் ஓமந்தை, பாலமோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வரும் காலங்களில் மிக மோசமான குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் வறட்சி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

வன்னி மாவட்டத்தின் உலர்வலயக் காடுகள் அரியவகை மரங்களினதும் வனவிலங்குகளினதும் இயற்கை வாழ்விடமாக உள்ளன. வவுனியாவில் காடுகள் அழிக்கப்படுவதால் அண்மைக்காலமாக வவுனியா - ஹொரவபொத்தானை வீதி மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் மனித - யானை மோதல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. காடுகளை இழந்து உணவுக்கும் நீருக்கும் தவிக்கும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களின் பயிர்களைச் சேதப்படுத்துவதோடு உயிர்களையும் பலியெடுத்து வருகின்றன. இப்போது இந்த 80 ஏக்கர்களையும் தாண்டி நிகழும் காடழிப்பு அந்தப் பகுதி மக்களின் உயிருக்கும் பயிர்ச் செய்கைக்கும் மென்மேலும் ஆபத்தை விளைவிப்பதாகவே அமைந்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் தேசிய சுற்றுச்சூழல் (திருத்த) சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை இந்த அரசு கொண்டுவந்துள்ள சூழலில் அதற்குச் சவால் விடுவது போல் வவுனியாவில் காடழிப்புத் தடையின்றி அரங்கேறி வருகிறது. சுற்றுச்சூழல் திருத்தச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய காடழிப்பை மேற்கொண்டு வருபவர் மீதும் அதற்குத் துணையாக உள்ள வனவளத் திணைக்கள அதிகாரிகள் மீதும் உடனடியாகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# வவுனியா மாநகர முன்னாள் மேயர் உள்ளிட்ட நால்வரைக் கைது செய்ய வவுனியா நீதிவான் நீதிமன்றம் கடுமையான உத்தரவு


## செங்கோல், பதக்கம், முதல்வர் ஆடை காணாமல்போன விவகாரத்தில் நடவடிக்கை

வவுனியா மாநகர சபையின் முன்னாள் மேயர் உள்ளிட்ட நான்கு பேரைக் கைது செய்ய வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ஜே.எஸ். ரத்னமலல தெரிவித்தார்.

வவுனியா மாநகர சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ செங்கோல், பதக்கம் மற்றும் மேயரின் ஆடை என்பன காணாமல்போயுள்ளன என்று மாநகர சபையின் செயலாளரினால் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சில நாட்களுக்கு முன்பு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கமைய, சம்பவ இடத்தில் பொருத்தப்பட்டுள்ள மூடிய சுற்றுக்காவல் கமரா காட்சிகளின் உதவியுடன் வவுனியா தலைமைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த விசாரணைகளின் அடிப்படையில், இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் மேயர் உள்ளிட்ட சிலரைக் கைது செய்வதற்கான அனுமதியை பொலிஸார் இன்று நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

பொலிஸாரின் இந்தக் கோரிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் குறித்து விரிவாக ஆராய்ந்த வவுனியா நீதிவான் நீதிமன்றம், வவுனியா மாநகர சபையின் முன்னாள் மேயர் சு. காண்டீபன் உட்பட நான்கு பேரைக் கைது செய்து, உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.



# பாடாதே? 'அந்த'ப் பாட்டைப் பாடாதே!

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**சில பாடல்களை பாடியதற்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் உண்டு. அந்தப் பாடல்களை நாதஸ்வரத்தில் இசைத்ததற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டவர்களும் உண்டு. வடமராட்சி நாகர்கோவிலில் ஒரு திருவிழாவில் அவ்வாறு போர்க்கால பாடல்களை நாதஸ்வரத்தில் வாசித்தவர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.அதனால் நினைவு நாட்களின் போது தடைக்குள் வரக்கூடியவை என்று கருதப்பட்ட பாடல்களை தவிர்த்து ஏனைய பாடல்கள் ஆங்காங்கே இசைக்கப்பட்டன.**

கடந்த வாரம் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஒரு நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தேனிசை செல்லப்பாவின் "பச்சை வயலே" என்ற பாடலைப் பாடிய பாடகர் பின்னர் விசாரிக்கப்பட்டிருக்கிறார். அந்தப் பாடலில் வரும் "தமிழீழம்" என்ற வார்த்தையை மேடையில் பகிரங்கமாக உச்சரித்தது பிரச்சினையா?

இது நடந்து கிட்டத்தட்ட ஒரு கிழமைக்குப் பின், வவுனியாவில், பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள நரசிம்மர் ஆலயத்தில் ஓர் இசை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சி தொடங்க முன்பு ஒரு போலீஸ்காரர் எழுதப்பட்ட ஓர் ஆவணத்தை மேடையில் ஏறி வாசித்தார். அதில் அந்த நிகழ்ச்சியில் என்னென்ன செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தல்களில் ஒன்று அங்கு நடக்கவிருக்கும் இசை நிகழ்ச்சியில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் பாடல்களை பாடக்கூடாது என்று இருந்தது.

இது நடந்த சில நாட்களின் பின் யாழ்ப்பாணத்தில், கைதடி பகுதியில் கைதடி வடக்கு கயிற்றசிற்றி கந்தசாமி கோவில் 11ஆவது நாள் விழாவிற்காக ஓர் இசை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தியாவில் இருந்து வருகை தந்த "சரிகம" பாடகர்களும் உள்ளூர் பாடகர்களும் இணைந்து நடாத்திய ஓர் இசை நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சிக்காக அனுமதி கேட்டுச் சென்ற ஏற்பாட்டாளர்களிடம், அங்கு பாடப்பட இருக்கும் பாடல்கள் தொடர்பான விபரங்களைத் தருமாறு போலீசார் கேட்டிருக்கிறார்கள். என்னென்ன பாடல்கள் பாடப்படும் என்று அவர்கள் வழங்கிய பட்டியலில் இருந்து ஒரு தொகுதி பாடல்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பாடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அகற்றப்பட்ட பாடல்களில் ஒன்று "விடைகொடு எங்கள் நாடே" என்ற பாடல். "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படத்தில் வரும் ஒரு பாடல்.அதாவது தமிழ்த் திரைப்பட பாடல்களில் சிலவற்றுக்கும் தடை என்று பொருள்.

இதன்பின் மற்றொரு சம்பவம், அதுவும் வவுனியாவில், கிடாச்சூரி கோவிலில் நடந்தது. அங்கே இசை நிகழ்ச்சிக்கு முன்னதாக ஒரு போலீஸ்காரர் மேடையில் ஏறி அறிவுறுத்தல்களை வாசித்திருக்கிறார். நிகழ்ச்சிக்கு போலீசார் வழங்கிய கால எல்லையை தாண்டி நிகழ்ச்சி தொடர்ந்தபோது, அதற்கு மீண்டும் போலீஸிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது, அப்பொழுது மீண்டும் ஒரு போலீஸ்காரர் மேடையில் ஏறி அறிவுறுத்தல்களை வாசிக்க முற்பட்டிருக்கிறார். அந்த நிகழ்ச்சியின் அறிவிப்பாளராக இருந்த ஊடகச் செயற்பாட்டாளரும் ஊடக ஆசிரியருமான,ராஜேஸ்வரன் அதைத் தானே அறிவிப்பதாக கூறியிருக்கிறார்.

இசை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும்போது அதாவது ஸ்பீக்கர் கட்டும்போது அதற்கு போலீசாரிடம் அனுமதி பெற வேண்டும். அண்மை மாதங்களாக இந்த நடைமுறை இறுக்கமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. போலீசாரிடம் அனுமதி கேட்டாலும் அவர்கள் கடைசி நேரத்தில்தான் அனுமதி தருகிறார்களாம். அப்படித் தந்த பின்னரும் நேரக் கட்டுப்பாடு விதிக்கிறார்கள். அண்மை வாரங்களாக மேடைகளில் ஏறி அறிவுறுத்தல்களையும் வழங்குகிறார்கள்.

ஏற்கனவே தீபச்செல்வனின் நூலுக்கு தடை. அதன் பின் உரும்பிராயில் நடந்த ஓர் இசை நிகழ்ச்சியில் சாந்தனின் மகன் ஒரு பாடலைப் பாடும் போது, அதனை போலீசார் இடையில் நிறுத்தினார்கள். அவ்வாறான பாடல்களை பாடக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்கள். அதன்பின் யாழ்ப்பாணம் நாவற்குழி பிரதேசத்தில் ஒரு கோவிலில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றை மகிமைப்படுத்தும் பாடல்களை பாடியதாக கூறி, கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு ராப் பாடகர் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேற்கண்டவைகளை தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? அரசாங்கம் எழுத்துக்கும் பாடல்களுக்கும் பயப்படுகிறதா?

2009ஐ உடனெடுத்து வந்த ஆண்டுகளில் நினைவு நாட்களை பெருமெடுப்பில் திட்டமிட்டு அனு‘டிக்க முடியவில்லை.2015ல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் நினைவு நாட்களை ஒப்பீட்டளவில் வெளிப்படையாக அனுஷ்டிக்கக் கூடியதாக இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக வந்த நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானத்தின்படி தமிழ் மக்களுக்கு நினைவு கூரும் உரிமை உண்டு. எனினும் நாட்டில் தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றை வெளிப்படையாகப் போற்றும் பாடல்களை பாடுவதற்கு அல்லது அதன் சின்னங்களை கொடிகளை பயன்படுத்துவதற்கு பொதுவாக தடை காணப்பட்டது. அதாவது நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்கு ஐ.நா. முயற்சித்தது என்று பொருள்.

அவ்வாறு சில பாடல்களை பாடியதற்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் உண்டு. அந்தப் பாடல்களை நாதஸ்வரத்தில் இசைத்ததற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டவர்களும் உண்டு. வடமராட்சி நாகர்கோவிலில் ஒரு திருவிழாவில் அவ்வாறு போர்க்கால பாடல்களை நாதஸ்வரத்தில் வாசித்தவர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதனால் நினைவு நாட்களின் போது தடைக்குள் வரக்கூடியவை என்று கருதப்பட்ட பாடல்களை தவிர்த்து ஏனைய பாடல்கள் ஆங்காங்கே இசைக்கப்பட்டன.

குறிப்பாக, அதன் பின்னர் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் வேட்பாளர் ஆகிய அங்கஜன் ராமநாதன் தனது பிரச்சாரத் தேவைகளுக்காக ஒரு தொகுதி பாடல்களை உருவாக்கினார். வன்னியில் போர்க்கால பாடல்களை பாடிய இசைக்கலைஞர்களை வைத்து அவர் தயாரித்த பாடல்களுக்கு அரசாங்கத்திடமும் புலனாய்வுத்துறையிடமும் அனுமதி பெறப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அந்தப் பாடல்கள் 2009க்கு முற்பட்ட காலத்தை மறைமுகமாகப் போற்றுபவை. அத்தேர்தலில் அங்கஜனுக்கு யாழ்ப்பாணத்திலேயே அதிகூடிய வாக்குகள் கிடைத்தன.

அதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட வேட்பாளர் சிலர் தாங்களும் அவ்வாறான பாடல்களை தயாரித்தார்கள். அந்தப் பாடல்களும் 2009க்கு முற்பட்ட காலத்தை ஏதோ ஒரு விதத்தில் போற்றுபவைதான். அதாவது தேர்தல் பிரச்சார தேவைகளுக்கு அவ்வாறான பாடல்களை பயன்படுத்தும் ஒரு போக்கை தொடக்கி வைத்ததே தென்னிலங்கை மைய கட்சிகள்தான். வாக்கு வேட்டைக்கு அப்படிப்பட்ட பாடல்கள், கருப்பொருட்கள் தேவைப்பட்டன. தமிழ்ச் சூழலில் அதுபோன்ற பாடல்களைப் பாடத் தேவையான இசைச்சூழலை ஊக்குவித்த காரணிகளில் அதுவும் ஒன்று.

2015க்குப்பின் நினைவு கூர்வதற்கான வெளி ஒப்பீட்டளவில் அதிகரித்தது. அதேசமயம் தமிழகத்திலிருந்து கலைஞர்கள் ஈழத்துக்கு வருவதும் இங்கு இசை நிகழ்ச்சிகளை நடத்துவதும் படிப்படியாக அதிகரித்தது. குறிப்பாக, பலாலிக்கும் தமிழகத்துக்கும் இடையிலான வான்வழி போக்குவரத்து பாதை திறக்கப்பட்ட பின் இந்தியாவில் இருந்து பாடகர்களையும் இசைக்குழுக்களையும் காசு கொடுத்து அழைக்கும் நிலைமை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது.

இது ஒரு புதிய போக்கு அல்ல. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரே இது காணப்பட்டது. காசு புரளும் பெருங்கோவில்கள் தமது திருவிழாக்களின்போது தமிழகத்தில் இருந்து இசைக் கலைஞர்களை அழைத்துக் கொண்டு வருவார்கள். தமிழகத்திலிருந்து சின்னமேளக் கச்சேரிகளும் வந்து போவதுண்டு. கடந்த நூற்றாண்டுகளிலும் இது காணப்பட்டது.

2009க்குப் பின் மீண்டும் பாடகர்களையும் இசைக் குழுக்களையும் கலைஞர்களையும் அழைக்கும் போக்கு மெல்லமெல்லத் தலையெடுத்தது. அதிகம் காசு புரளும் கோவில்கள், அதிகம் காசு புரளும் உபய காரர்கள், குறிப்பாக, புலம்பெயர்ந்த தமிழ் நிதியைத் திரட்டக்கூடிய உபயகாரர்கள் பெருங்காசை கொட்டி தமிழகத்திலிருந்து பாடகர்களையும் இசைக் குழுக்களையும் ஈழத்துக்கு கொண்டு வந்தார்கள்.

அதேசமயம் "சரிகமப" போன்ற தமிழக தொலைக்காட்சி தொடர்களில் ஈழத்துப் பாடகர்கள் பாடகிகள் பாடத் தொடங்கினார்கள்வெற்றியும் பெற்றார்கள். இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக சரிகமப மேடைகளில் புகழ்பெற்ற பாடகர்களை இசை நிகழ்ச்சிகளுக்கு அழைக்கும் ஒரு போக்கு மேலெழுந்தது. இந்தப் பாடகர்களுக்கும் பாடகிகளுக்கும் இசைக்குழுக்களுக்கும் கொடுக்கப்படும் காசு ஒப்பீட்டளவில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட திரைத்துறை "செலிபரேட்டிகளுக்கு" கொடுக்கும் காசை விட குறைவானது.கிட்டத்தட்ட ஒரு பாடகருக்கு இலங்கைக் காசில் 4 லட்சத்துக்கும் குறையாமல் தேவைப்படும். இந்த மேடைகளில் சரிகமப நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற ஈழத்து பாடகிகளும் தமிழக பாடகர்களோடு இணைந்து பாடினார்கள்.

சரிகமப மேடைகளில் ஈழத்துப் பாடகர்கள் ஜொலிக்க தொடங்கிய அதே காலகட்டத்தில் ரப் பாடகரான வாகீசனும் தமிழக தொலைக்காட்சி தொடர் ஒன்றில் பிரபல்யமானார். யாழ்ப்பாணத்து தமிழில் அவர் கதைத்தார். அவருடைய ரப் பாடல்களும் யாழ்ப்பாணத்து தமிழை யாழ்ப்பாணத்தின் உச்சரிப்போடு மொழிந்தன. வாகீசன் அணியின் "காக்கும் வடிவேல்" பாடல் "வைரல்" ஆகியது. அந்த பாடகர் அணிக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வரவேற்பு அதிகமாக கிடைத்தது. தாயகத்திலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் அவருடைய இசை நிகழ்ச்சிகளுக்கு லட்சக்கணக்கில் காசு திரள்கிறது. சரிகமப பாடகர்களும் வாகீசனின் குழுவும் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பவர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தனர்.

இந்த இசை நிகழ்ச்சிகளில் தாயக பாடகர்கள் போர்க்காலப் பாடல்கள் சிலவற்றையும் பாடத் தொடங்கினார்கள். மேற்படி நிகழ்ச்சிகளும் மேடைகளும் பெருமளவுக்கு வணிக மேடைகள்தான். லாப நோக்கமுடையவைதான். அவை வெளிப்படையான அரசியல் மேடைகள் அல்ல அரசியல் நிகழ்ச்சிகளும் அல்ல. வணிக மேடைகள். ஆலய மேடைகள். எனவே அந்த வணிக மறைப்புக்குள் தாயக பாடல்கள் மெல்ல மெல்ல தலை நீட்டின.பின்னர் வணிக மேடைகள் அல்லாத மேடைகளிலும் குறிப்பாக போராளிகள் நலன்புரி அமைப்பின் மேடைகள், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது நினைவு நாள் போன்ற மேடைகளிலும் போர்க் காலப் பாடல்கள் பாடப்படும் நிலைமை படிப்படியாக அதிகரித்து வந்த ஒரு சூழலில், அரசாங்கம் பாடல்களைக் கண்டு விழிப்படைந்தது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைவு நாட்களை அனேகமாகத் தடுக்கவில்லை. சில உதிரியான சம்பவங்களைத்தவிர பெரும் போக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைவு கூர்தலை கண்டும் காணாமல் விட்டது எனலாம்.இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள், முன்பு நினைவு நாட்களின் போது பகிரங்கமாக ஸ்பீக்கரில் ஒலி பெருக்குவதற்கு பயந்த பாடல்கள் சிலவற்றை ஆங்காங்கே கேட்கக்கூடியதாக இருந்தது.எனினும் இப்பொழுது அரசாங்கம் இந்த விடயத்தை கண்டும் காணாமல் விடுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறதா?

இந்த அரசாங்கம் தென்னிலங்கையில் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவு. தென்னிலங்கையில் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் விசேஷமான, ரசனைக்குரிய பகுதி அங்கே காணப்பட்ட கலைஞர்களின் கலை வெளிப்பாடுகள்தான். அது கலைப்பெறுமதிமிக்க ஒரு போராட்டம். ஒரே சமயத்தில் ஜனரஞ்சகமானவைகளாகவும் படைப்புத்திறன் மிக்கவைகளாகவும் அக்கலைஞர்களின் வெளிப்பாடுகள் காணப்பட்டன. தென்னிலங்கையில் நடந்த மக்கள் எழுச்சிகளின் பிரதானமான ஒருபகுதி அதன் கலையாக்கம். அங்கே ஆடலும் பாடலும் போராட்டத்தின் பகுதிகளாக காணப்பட்டன. மக்களைக் கவர்ந்திழுக்கும் பகுதிகளாகக் காணப்பட்டன.

அந்தப் போராட்டத்தின் கனிகளை "ஹைஜாக்" பண்ணிய ஜேவிபிக்கு இது நன்கு தெரியும். ஒரு போராட்ட இயக்கமாக ஜேவிபிக்கு தனிப்பட்ட முறையில் இசையின் பெறுமதி விளங்கும். இசை எப்படி மக்களை ஒன்றுதிரட்டும் என்பது ஜேவிபிக்கு நன்கு விளங்கும். இந்த விளக்கம்தான் இப்பொழுது பாடல்களுக்குப் போடப்படும் தடையா?

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பு — தாந்தாமலை முருகன் ஆலய வரலாற்றை சிலர் திரிவுபடுத்தி சீர்குழைக்கின்றனர் என்கிறார் கொக்கட்டிச்சோலை பிரதேச சபை தவிசாளர்

மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோவிலுக்கு வெளிநாட்டு தூதுவர்களை அழைத்து வந்து அதன் வரலாற்றையும் தமிழர்களுடைய தொன்மையான பூர்வீக இடங்களையும் போரதீவு பற்று பிரதேச சபை தவிசாளர் திரிவுபடுத்தி பொய்யான பிழையான கருத்துக்கள் வழங்கி தமிழர்களின் வரலாற்றை சீர்குவைத்து வருகின்றனர் என கொக்கட்டிச்சோலை பிரதேச சபை தவிசாளர் கிரேஸ் குமார் கடும் கண்டனம் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஜெர்மனி தூதுவரை போரதீவு பற்று பிரதேச சபை தவ-ிசாளர் மதிமேனன் குறித்த ஆலயத்துக்கு அழைத்து சென்று ஆலயம் 300 வருட வரலாற்றைக் கொண்டது என பொய்யான கருத்துக்களை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து கொக்கட்டிச்சோலை பிரே-தச சபை தவிசாளர் புதன்கிழமை (30) )ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோவில் வரலாறு அதனுடைய கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பாக பிரதேசத்தில் இருக்கும் ஒரு சில தமிழரசு கட்சி செயற்பாட்டாளர்களால் செயல்பாடு நடைபெற்றது. அதை நாங்கள் சென்று பார்வையிட்டு நாங்கள் அவர்களுடைய கருத்துக்கள் பொய்யான பிழையான திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் என்று உரைத்தோம்.

கி.பி 301, மூவாயிரத்து 700 வருடங்கள் வரலாற்றை கொண்ட இந்த ஆலயம். இருந்தபோதும் பழமைவாய்ந்த பிரதேசங்கள் தொல்பொருள் அறிவிக்க முடியும் என்கிற வரலாறு அவர்களுக்கு தெரியாது ஆகவே இப்படியான ஒரு குழப்பமான நிலையை உருவாக்க உங்களுடைய பிரதேசத்தின் வளர்ச்சியும் எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை சீர்குலைக்கின்ற செயல்பாடு அமைந்திருந்தது.

உண்மையாகவே இந்த ஆலயம் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பணிசெய்ய வேண்டுமாக இருந்தால் ஆலயத்தின் நிருவாக சபையினரை அழைத்து அவர்கள் ஊடாக கலந்தாலோசித்து அதற்கான ஒரு திட்டவரைவு அந்த உயர் ஸ்தாணிகரிடம் கையளித்திருக்க வேண்டும். ஆனால் எந்த விதமான ஒரு திட்டவரைவே திட்டமிடல்களும் இல்லாது ஒரு அரசியலுக்காக அந்த இடத்தை பயன்படுத்தி இருந்தார்கள்.

எங்களுடைய பிரதேசத்தில் வெளிநாட்டு தூதுவர்களை அழைத்துவந்து எமது தமிழர்களுடைய பூர்வீக இடங்களையும் பூர்வீக வரலாற்று களையும் திரிவுபடுத்தி ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் உட்பட்டது தான் என ஒரு கருத்தை முன்வைத்து தமிழர்களுடைய வரலாற்றை தமிழரசு கட்சி சீரழிக்கும் ஒரு கருத்தாக பார்க்கிறேன்.

தமிழர்களின் வரலாற்று தொன்மையான பிரதேசங்களை பூர்வீகம் இல்லாத பிரதேசங்களாக காட்டுகின்ற வரலாற்றை மூடிமறைக்கும் செயற்பாடாக பார்க்கிறேன் என்றார்.

# அநுரவின் அரசாங்கமும் வெளியிடாத, 7 ஆண்டுகள் தாமதமான அறிக்கை குறித்து ஐ.நா.வின் வெளிப்படுத்தியது!



சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரஜைகள் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்குள்ளாகும் அபாயம் குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்பட்ட இரகசிய அறிக்கையின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு இலங்கையின் அநுரவின் அரசாங்கம் தவறியுள்ளமை தெரியவந்துள்ளது.

சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுக்குழு, இலங்கைக்கான தமது பத்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த பின்னரே, இந்த அதிர்ச்சியூட்டும் தகவலை வெளிப்படுத்தியுள்ளது. விசாரணைக்கு முன்னர் நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைப்பது, சிறைச்சாலைகள் நெரிசலாகக் காணப்படுவது மற்றும் தடுப்பு மையங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து கவலை தெரிவித்துள்ள உபகுழு, சித்திரவதைகளை தடுப்பதற்கான தேசிய பொறிமுறையை (NPM) வலுப்படுத்துமாறு ஜெனிவாவிலிருந்து வெளியிட்ட அறிக்கையின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே, சித்திரவதைகளைத் தடுப்பதற்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள தேசிய பொறிமுறையாகும்.

“எங்களது முதலாவது விஜயம் முடிந்து ஏழு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், நாம் முன்னர் வழங்கிய பல பரிந்துரைகள் இதுவரை முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவே, சுதந்திரத்தை இழந்த மக்கள், தாங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையில் எந்தவொரு முன்னேற்றத்தையும் இதுவரை காணவில்லை” என சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உப-குழுவின் தலைவர் அயிஷா ஜூனே மொஹம்மட் தெரிவித்துள்ளார்.

ஜூன் 14 முதல் 25 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் தங்கியிருந்த ஐ.நா தூதுக்குழுவானது, அந்த காலப்பகுதியில் சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்கள், விளக்கமறியல், புனர்வாழ்வு முகாம்கள் மற்றும் ஏனைய தடுப்பு மையங்கள் உள்ளிட்ட பல இடங்களுக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், அரசாங்க அதிகாரிகள், NPM உறுப்பினர்கள், குடிமைச் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புகளையும் சந்தித்துள்ளது.

உப குழுவின் வருகையின் ஆரம்பக்கட்டத்திலேயே நாட்டின் முன்னணி மனித உர-ிமை அமைப்புகளின் ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தரணிகள், அவர்களை கொழும்பில் வைத்து சந்தித்தனர். இதன்போது சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு மையங்களின் நிலைமை, பொ-லிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் கைதுகளின் போது நிகழும் மரணங்கள் உள்ளிட்ட சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் அரச மனித உரிமை நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்தும் உபகுழுவிற்கு தகவல்களை வழங்கியிருந்தனர்.

இருப்பினும், கைதுகளின் போது நிகழும் மரணங்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கெ-ாலைகள் குறித்து கவனம் செலுத்தாத உபகுழுவின் அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயல்பாடு குறித்து திருப்திகரமான முறையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

“சித்திரவதை மற்றும் கொடுமைப்படுத்தல்களை தடுப்பதற்கு, சுதந்திரமான, போதுமான வளங்களைக் கொண்ட மற்றும் திறம்பட செயல்படும் ஒரு தேசிய பொறிமுறையானது இன்றியமையாத காரணியாகும். பதவிகளுக்கு அப்பால் சென்று, சுயாதீனம், வினைத்திறன் மற்றும் செயற்பாட்டுத் திறனை, தொடர்ந்து உறுதிப்படுத்துவது என்பது, சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்தைகள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான ஒப்பந்தத்தின் விருப்ப நெறிமுறையின் (OPCAT) கீழ் உள்ள கடமையாகும்” என உபகுழுவின் தலைவர் மொஹம்மட் நினைவுபடுத்தியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதியன்று, சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தின் விருப்ப நெறிமுறைக்கு, இலங்கை இணங்கியது.

தமது பரிந்துரைகளுடன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ள இரகசிய அறிக்கையையும், அதேபோன்று நல்லாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட அறிக்கையையும் பகிரங்கப்படுத்துமாறு இலங்கைக்கான வருகையின் பின்னர், சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழு கோரிக்கை விடுத்துள்ளது. இது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலையும், அத்துடன் சித்திரவதைகளை ஒழிப்பதற்கான பொது உரையாட-லை மேம்படுத்தவும் ஊக்குவிக்கும் என உபகுழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# ஹரக் கட்டாவை விடுவிக்க மனைவியிடம் சொகுசு ஹோட்டலில் வைத்து இலஞ்சம்?

## 3 கொழும்புச் சட்டத்தரணிகளுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு



பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான “ஹரக் கட்டா” என்பவரை விடுவிப்பதற்காக, அவரது மனைவியிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் மூன்று சட்டத்தரணிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

“புரவெசியா” அமைப்பின் அழைப்பாளர் ரவீந்திர நிஷங்கவினால் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் இந்த முறைப்பாடு கையளிக்கப்பட்டதுடன், அதனையடுத்து அவர் ஊடகங்களுக்கும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

திஸ்ஸ வேரகொட, புலஸ்தி ரூபசிங்க மற்றும் சஞ்சய ஆரியதாஸ ஆகிய மூன்று சட்டத்தரணிகளுக்கு எதிராக இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

டுபாய் பயணம் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ரவீந்திர நிஷங்க மேலும் தெரிவிக்கையில், “மேற்படி மூன்று சட்டத்தரணிகளும் கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி டுபாய் நாட்டுக்குச் சென்றுள்ளனர். அங்கு ஆகஸ்ட் 15 முதல் 18ஆம் திகதி வரை ஆடம்பர ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து, ஹரக் கட்டாவின் மனைவியைச் சந்தித்து இந்தக் கொடுக்கல் - வாங்கல் தொடர்பாகப் பெருந்தொகை பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களின் டுபாய் பயணத்துக்கான விமான பயணச்சீட்டுக் கட்டணங்கள் மற்றும் அங்குள்ள ஆடம்பர ஹோட்டல்களில் தங்குவதற்கான கட்டணங்கள் அனைத்தையும் ஹரக் கட்டாவின் மனைவியே முழுமையாகச் செலுத்தியுள்ளார்.

எம்மால் முன்வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டை அந்த சட்டத்தரணிகளால் ஒருபோதும் மறுக்க முடியாது எனச் சவால் விடுக்கின்றேன். அவர்கள் டுபாய் சென்றமைக்கான விமானச்சீட்டுகள் மற்றும் தங்கியிருந்த ஹோட்டல் விவரங்கள் போன்ற உறுதியான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

எனவே, அரசு முன்னெடுத்து வரும் இலஞ், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்த வேண்டுமாயின், இந்த விவகாரத்துடன் தொடர்புடைய திஸ்ஸ வேரகொட, புலஸ்தி ரூபசிங்க மற்றும் சஞ்சய ஆரியதாஸ ஆகிய மூன்று சட்டத்தரணிகளையும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு உடனடியாகக் கைது செய்து முறையான விசாரணைகளை நடத்த வேண்டும்.

அவ்வாறு கைது செய்து விசாரிப்பதன் மூலமே, இந்தச் சந்திப்புகளில் என்ன பேசப்பட்டது, யாருக்காக இந்த இலஞ்சப் பணம் கேட்கப்பட்டது மற்றும் எவ்வளவு பணம் பெறப்பட்டது போன்ற அனைத்து உண்மைகளையும் நாட்டுக்கு வெளிப்படுத்த முடியும்.” - என்றார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – பிராம்ப்டன் நகர மன்றத்தில் பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம். 2026ம் ஆண்டிற்கான தலைமைத்துவக் குழுவை நியமித்துள்ளது!

## சமூகச் செயற்பாட்டாளர் விசு கணபதிப்பிள்ளை அவர்களும் மேற்படி குழுவில் இணைக்கப்பெற்றுள்ளார்.



கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் (BRAC), கடந்த ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை அன்று பிராம்ப்டன் நகர சபா மன்றத்தில் நடைபெற்ற ஒரு சிறப்பு தலைமைத்துவ உறுதிமொழி எடுக்கும் விழாவில், தனது 2026 தலைமைத்துவக் குழுவை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இந்த விழா, ஒற்றுமை, சேவை மற்றும் குடிமைத் தலைமைத்துவத்தைக் கொண்டாடும் விதமாக, பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த சமூகத் தலைவர்களை ஒன்றிணைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.இந்தக் குழுவில் பிரம்ரன் வாழ் சமூகச் செயற்பாட்டாளர் விசு கணபதிப்பிள்ளை அவர்களும் இணைக்கப்பெற்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. பிரம்ரன் நகரசபையில் நேரடியான மேற்பார்வையில் இயங்கவுள்ள இந்த சங்கமானது பல அதிகாரங்களைக் கொண்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் - BRAC என்பது பிராம்ப்டன் முழுவதும் உள்ள சமூக சங்கங்கள், கலாச்சார குழுக்கள் மற்றும் தலைவர்களை இணைக்கும் ஒரு குடை அமைப்பாகும். “ஒரே பிராம்ப்டன். ஒரே சமூகம்.” என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் சமூகங்களுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டு, ஒத்துழைப்பு, அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் குடியிருப் பாளர்களுக்கான ஒரு வலுவான கூட்டுக்குரலையும் உறுதிப்படுத்துகிறது.

ஒரு கட்சி சார்பற்ற மற்றும் மத சார்பற்ற அமைப்பாக, கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் அரசியல், மதம், கலாச்சாரம் அல்லது தேசியப் பிரிவினைகள் இன்றி அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் சேவை செய்ய உறுதிபூண்டுள்ளது. ஒரு வலுவான, மேலும் இணைக்கப்பட்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நகரத்தை உருவாக்குதல் என்ற ஒரே பொதுவான நோக்கத்தின் கீழ் பிராம்ப்டன் மக்களை ஒன்றிணைப்பதே இதன் நோக்கம் எனவும் அன்றைய தினம் அறிவிக்கப்பெற்றது.


THE CORPORATION OF THE CITY OF BRAMPTON

Certificate of Recognition

Visvalingam Kanapathypillai

ஒவ்வொரு ஆண்டும், பொதுச் சேவையில் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் அர்ப்பணிப்புள்ள சமூகத் தலைவர்களை வரவேற்பதன் மூலம், கனடா- பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் தனது தலைமைத்துவக் குழுவைப் புதுப்பித்து விரிவுபடுத்துகிறது. 2026-ஆம் ஆண்டின் குழு, பிராம்ப்டனின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதோடு, நகரம் முழுவதும் உள்ள பல சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த விழாவை, BRAC-இன் நிறுவனர் மற்றும் தலைவரும், பிராம்ப்டன் படகுப் பந்தயத்தின் நிறுவனர் மற்றும் அமைப்பாளராகவும் பரவலாக அறியப்படுபவருமான குரியன் பிரக்கானம் வழிநடத்தினார். தனது சிறப்புரையின் போது, BRAC தலைமைத்துவ உறுதிமொழி என்பது ஒரு சடங்கு சார்ந்த பாரம்பரியத்தை விட மிக மேலானது என்று திரு. பிரக்கானம் வலியுறுத்தினார்.

கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் என்னும் எமது அமைப்பானது தலைமைத்துவ உறுதிமொழி என்பது நேர்மை, பொறுப்பு மற்றும் ஒற்றுமையுடன் சமூகத்திற்கு சேவை செய்வதற்கான ஒரு அர்ப்பணிப்பாகும். தலைமைத்துவம் என்பது பதவிகளைப் பற்றியது அல்ல-அது செயல், பொறுப்புக்கூறல் மற்றும் மற்றவர்களின் வாழ்வில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதைப் பற்றியது.”

அரசியல், மதம், கலாச்சாரம் மற்றும் தேசிய வேறுபாடுகளைக் கடந்து ஒவ்வொரு தலைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் ஊக்குவித்தார். மேலும், ஒற்றுமையின் தூதுவர்களாக மாறவும், ஆக்கப்பூர்வமான தலைமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் சமூக அக்கறைகளை முக்கிய நீரோட்டத்திற்குக் கொண்டு வரவும் அவர்களை அவர் வலியுறுத்தினார்.

பதவிப் பிரமாண விழாவைத் தொடர்ந்து, கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் தனது முதல் பேரவைக் கூட்டத்தை பிராம்ப்டன் நகர மண்டபத்தில் நடத்தியது. அங்கு, வரும் ஆண்டிற்கான அமைப்பின் முன்னுரிமைகள், சமூக முன்னெடுப்புகள் மற்றும் தலைமைத்துவ நோக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

திரு. ஆண்டி கேன், திரு. பல்ஜித் பாவா, திரு. தருண் கெண்டா, விஸ்வலிங்கம் (விசு) கணபதிபிள்ளை, செல்வி. சீமா கேம்ரா மற்றும் டாக்டர். ஷாஹினா கிஷ்வர் உள்ளிட்ட பல புகழ்பெற்ற பிராக் தலைவர்கள் பேரவையில் உரையாற்றினர். அவர்கள் ஒவ்வொருவரும் சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும் பிராக்கின் தொலைநோக்குப் பார்வையை ஆதரிப்பதற்கும் தங்களின் அர்ப்பணிப்பைப் பகிர்ந்து கொண்டனர்.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை, செப்டம்பர் 12 அன்று பிராம்ப்டன் நகர மண்டபத்தில் ஒரு பெரிய பொது சமூக நிகழ்வை நடத்துவதற்கான திட்டங்களை கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் அறிவித்துள்ளது (தேதி உறுதிப் படுத்தலுக்கு உட்பட்டது). இந்த நிகழ்வில், பிராக் தலைமைத்துவக் குழு 2026-இன் அதிகாரப்பூர்வ பொது அறிமுகமும், பிராம்ப்டன் முழுவதும் சிறந்த சமூகத் தலைவர்களைக் கொண்டாடுவதற்கும், குடிமக்கள் பங்கேற்பை அதிகரிப்பதற்கும் உதவும் இரண்டாவது ஆண்டு குடியிருப்போர் விழாவும் இடம்பெறும்.

மேலும், ஒற்றுமை மற்றும் பொதுச் சேவை குறித்த தனது தொலைநோக்குப் பார்வையைப் பகிர்ந்து கொள்ளும் சமூகத் தலைவர்கள், அமைப்பின் ஒரு பகுதியாக ஆவதற்கு கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் ஒரு வெளிப்படையான அழைப்பை விடுத்துள்ளது.




“ஒரே பிராம்ப்டன். ஒரே சமூகம்.” என்ற தனது வழிகாட்டும் கொள்கையுடன், கனடா - பிராம்ப்டன் குடியிருப்போர் சங்கம் சமூகங்களுக்கு இடையிலான உறவுகளைத் தொடர்ந்து வலுப்படுத்தி, தலைமைத்துவத்தை ஊக்குவித்து, மேலும் வலிமையான மற்றும் துடிப்பான பிராம்ப்டனை நோக்கி குடியிருப்பாளர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

# கனடா தினத்தன்று முதியோர்களுக்கு இலவச உணவளித்தும் ஸ்காபுறோ பொது வைத்தியசாலைக்கு 5 இலட்சம் டாலர்களையும் அன்பளிப்புச் செய்தும் மகிழ்ச்சியடைந்த வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார்




தமிழ்நாட்டின் புகழ்பெற்ற “சரவணபவன்” சைவ உணவகத்தின் நூற்றுக்கணக்கான கிளைகள் உலகெங்கும் இயங்கிவருகின்றன.

அவற்றுள் நான்கு “சரவணபவன்” கிளைகளை கனடாவில் நிர்வகித்து வருபவரும் வர்த்தகத்துறை முன்னோடியும் கனடா உதயன் பத்திரிகையின் அனைத்து செயற்பாடுகளையும் செவ்வனே ஆற்றுவதற்கு முன்வந்து ஆதரவு வழங்குபவருமான சகோதரர் கணேசன் சுகுமார் அவர்கள் தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் கனடாவிலும் பொது வைத்தியசாலைகள் மற்றும் ஆலயங்கள் - பொது அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு தாரளமாக நிதி அன்பளிப்புக்களை வருபவர் ஆவார்.

அந்த வரிசையில் நேற்று 01-07-2026 அன்று கனடா தினத்தன்று சரவணபவன் ஸ்காபுறோ கிளையில் ஆயிரக்கணக்கான முதியவர்களான பெரியோர்களுக்கு இலவசமாக மசாலா தோசையும் தேநீர் மற்றும் குளிர்பானங்களையும் வழங்கினார். இதற்காக வாகனத் தரிப்பிடத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பெற்றும் அழைக்கப்பட்டவர்கள் வசதியாக இருந்து உணவருந்திச் செல்ல வாய்ப்புக்களை வழங்கினார்.





அத்துடன் அன்றைய தினம் கனடாவின் மத்திய அரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் - மாகாண அரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் - அமைச்சர்கள் மற்றும் நகரசபைகளின் கவுன்சிலர்கள் என பலரும் சங்கமித்த நிகழ்வில் ஸ்காபுறோ பொது வைத்தியசாலை நிதிக்காக 5 இலட்சம் கனடிய டாலர்களை அன்பளிப்புச் செய்தார். வைத்தியசாலையின் சார்பில் அதன் பிரதிநிதி ஒருவரிடம் கணேசன் சுகுமார் மற்றும் பிரமுகர்கள் ஒன்றிணைந்து அந்த“மாதிரிக் காசோலை”யை வழங்கினார்கள்.. இங்கே காணப்படும் படத்தில் கனடா தினத்தையொட்டி சிவப்பு நிறை “ஷேர்ட்” அணிந்து கணேசன் சுகுமார் அவர்கள் நண்பர்கள் மற்றும விருந்தினர்கள் ஆகியோருடன் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்.

***- சத்தியன்***


நீங்கள் விரும்பும் HONDA வாகனங்களை ரமணன் திரு என்னும்
விற்பனை முகவரோடு தமிழில் உரையாடி வாங்கலாம்
Honda GO TIME
CANADIAN BUILT.
CANADIAN DRIVEN.
CR-V
1.99 %
$1,000
Honda GO TIME
CIVIC
1.99 %
$1,000
HONDA
Certified
PRE-OWNED
Honda Certified Used Vehicles are highly sought after thanks to
Honda's legendary reputation for durability, quality and reliability.
Rafih AUTO GROUP
Midtown Honda
HONDA
3400 Dufferin St, North York, ON M6A 2V1
RAMANAN THIRU
SALES CONSULTANT
647 818 6645
RESERVE YOURS TODAY
MADE WITH DOMESTIC & IMPORTED PARTS.
† See dealer for full details.
° O.A.C. Terms and conditions apply.


HAPPY
CANADA
DAY!
VIJAY
THANIGASALAM
MPP - Scarborough-Rouge Park
8130 Sheppard Avenue East, Unit 105
Scarborough, ON M1B 3W3
416-283-8448 • vijay.thanigasalam@pc.ola.org
vijaythanigasalam.ca

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

LIBERAL

AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association






Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Hari Om





# SAREGA Music School of Fine Arts

## *****25th Annual Celebrations*****

Sponsored by

THE KUDDY FOUNDATION | KG TRUCK GROUP | YAMAHA | Leela Super Market | உதயன்

வணக்கம்! **SAREGA Music School of Fine Arts**-இன் 25-வது ஆண்டு இசை நிகழ்ச்சி மற்றும் வெள்ளி விழா கொண்டாட்டம், 2026 ஜூன் 28, ஞாயிற்றுக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு, தங்கள் வருகை மற்றும் வாழ்த்துகளால் விழாவைச் சிறப்பித்தனர். பழைய மாணவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொண்டது இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தது. (**Brampton Councillor Navjit Brar Kaur** உள்ளிட்டோர் இடம்பெற்ற சில புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. காவ்யா/Bass, சுரேஷ்/Drums, மாதேஷ்//Tabla ஆகியோர் அடங்கிய **Sahithya's Band,** மற்றும் **GTA** பகுதியின் பிரபலமான பாடகர்களான பிரபா பாலகிருஷ்ணன், நந்திதா, சாரிகா, சாய்சன், அஜீஷ், கோபி, ஷெனால், ஷெனாயா ஆகியோர் தங்கள் சிறந்த இசை மற்றும் பாடல் பங்களிப்பை வழங்கினர். இவர்களுடன் **பிரபல பாடகர் மகாராஜபுரம் ராமு** (இவர் 'பாடும் நிலா' எஸ்.பி.பி. அவர்களின் குரல் அவர்களும் இணைந்து பாடினார். நடனஆசிரியர் கலைமதி வாகீசன் அவர்களின் மாணவர்கள் மற்றும் அமிர்தலயா நடன அகாடமி மாணவர்களின் அழகான நடன நிகழ்ச்சிகள் இந்த விழாவிற்கு மேலும் மெருகூட்டின. அனைத்து ஆதரவாளர்கள் (Sponsors), ஊடக நண்பர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், உதவியாளர்கள் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். **அன்புடன், நியூயார்க் ராஜா - இசையமைப்பாளர்**










**Brampton Councillor Navjit Brar Kaur Logan Kannan Iya, Ramu, Tamil Osai Sri NewYork Raja Sahithya/Keys Kavya/Bass Suresh/Drums Mahthesh/Tabla**






**Mrs. Balarubramaniam Sankarappillai with Sankarathas – Pushpa, Abhinav & Gogeethan-CEO/TKF Jegatheeswaran MC/Mathy with Sornalingam**







**Keyboard Giveaways Mrs. Sankarappillai & Sankarathas - Balathas Family Honoring Thinuja/Leela Supermarket - Kalaimathy Vaageesan with Students – Rakesh Honored**







**Honoring Gogeethan Viji Raja Honoring Malini Mrs & Mr Muthulingam Family Honored Singers Nandita, Prabha, Ajeesh & Sarika**







**Students Vihaan & Seyon - Old Students Abburna, Mithurna & Thabishan with New York Raja - Athishayan, Apoorvan, Aajeesh, Aarush, Vihaan, Venpa & Atharvaa**

**New Classes Starting in September – Please Contact New York Raja @ 416 884 7288 or Email: Learn@saregamusic.com for More info.**

cmr | tvi HD | east FM 102.7 | Bucket BIRYANI

***This Show is to Encourage, Appreciate & Honour the Students on their Accomplishments, and Showcase their talents on the Stage***

**This year we gave away $5500+ worth Music Instruments & Gift Certificates & Gift Hampers to All the Students & Parents!**

**Gold Sponsors/TKF The Kuddy Foundation & KG Truck Group | Hospitality Sponsor/Leela Super Market**

**Media Sponsors: Uthayan News | Tamil Osai | CMR/TVI | East FM**

# எதிரிகளை கலங்கடிக்க எம்மினத்தில் உதித்த "உயிராயுதங்கள்"!




***"போரியல் ரீதியாக இலங்கையின் முப்படைகளுக்கும் மிகப்பெரிய சவாலாகவும் சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய கரும்புலிகள் தொடர்பில் இலங்கை இராணுவத்தின், கடற்படையின், உளவுப்பிரிவின் தளபதிகள் கூறுவது என்ன? இலங்கை இராணுவத்தின் தளபதியாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலராகவும் இருந்தவர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன. விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரில் 53 ஆவது படையணியை வழிநடத்திய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, தனது "நந்திக்கடலிற்கான பாதை" (Road to Nandikadal) என்ற நூலில் விடுதலைப்புலிகளின் போரிடும் குணம் பற்றி எழுதியுள்ளார். அதில் கரும்புலிகள் அமைப்பின் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு இராணுவத்தினரையே வியக்க வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிடிபட்டால் அமைப்பின் இரகசியங்கள் வெளியே கசிந்துவிடக் கூடாது என்பதற்காக, கழுத்தில் சயனைட் குப்பியைத் தொங்கவிட்டுக்கொண்டு, சாவைக் கண்டும் அஞ்சாமல் இலக்குகளை நோக்கி முன்னேறும் கரும்புலிகளின் மன உறுதி மிக உக்கிரமானது என்று பதிவு செய்துள்ளார்."***

**- கே.பாலா -**

**த**மிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், அளப்பரிய அர்ப்பணிப்பிற்கும் அதிமுக்கிய திருப்பு முனைகளுக்கும் எதிரிகளை கலங்கடித்த வெற்றிகளுக்கும் "உயிராயுதங்களாக", "தற்கொடை" யாளர்களாகத் தம்மை ஆகுதியாக்கியவர்கள் விடுதலைப்புலிகளின் முகம் தெரிய நெருப்பு மனிதர்களான "கரும்புலிகள்". "புயலெனக் கிளம்பி, இடியென வெடித்து, விடுதலைப் பாதையைத் தங்கள் குருதியால் வெளிச்சமாக்கிய உன்னத தியாகிகள் கரும்புலிகள். அவ்வாறான நெருப்பு மனிதர்களை, நினைவுகூர ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் நினைவு நாளே கரும்புலிகள் நாள்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கரும்புலி கப்டன் மில்லரின் வடமராட்சி நெல்லியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலுடன் கரும்புலிகள் சகாப்தம் தொடங்கியதையிட்டே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் 05.07.1993 அன்று ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு வருடமும் தமிழர் தாயகத்திலும் தமிழர் வாழும் புலம்பெயர் தேசமெங்கும் கரும்புலிகள் நாள் உணர்வு பூர்வமாக அனு‘டிக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ் குடா நாட்டை கைப்பற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினரால் 1987ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மிகப்பாரிய "ஒப்ரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கை காரணமாக புலிகள் இராணுவ ரீதியான சவால்களை எதிர்கொண்ட வேளையில் அதனை முறியடிப்பதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினால் கரும்புலித் தாக்குதல் தந்திரோபாயம் திட்டமிடப்பட்டது. அதனடிப்படையில் கரும்புலியாக சென்று தங்கள் உயிர்களை ஆயுதமாக்க திலீபன் உட்பட புலிகளின் மூத்த தளபதிகள் பலர் போட்டியிட்ட போதிலும் மில்லர் என்ற போராளிக்கு அந்த வாய்ப்பு கிட்டியது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலை கொண்டு குடாநாட்டை முற்றுகையிடுவதற்கான அடுத்த கட்ட தயார்படுத்தல்களை மேற்கொண்டு வந்த இலங்கை இராணுவத்தினர் மீது வெடிகுண்டு நிரப்பிய வாகனத்தில் சென்று கப்டன் மில்லரினால் முதல் தடவையாக கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலின் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து குடாநாட்டை கைப்பற்றும் திட்டமும் இராணுவத்தினரால் கைவிடப்பட்டது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது மில்லர் கரும்புலித் தாக்குதல் நடத்தி இன்று 39 ஆண்டுகள் கடந்துவிட்டன.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி விடுதலைப்புலிகளினால் முதல் முதலாக கரும்புலித்தாக்குதல் நடத்தப்பட்டபோதும் 05.07.1993 அன்றுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினால் ஜூலை மாதம் 5ஆம் திகதி "கரும்புலிகள் நாள்" என அறிவிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஆரம்பமான கரும்புலிகளின் சகாப்தத்தில் 2008 ஜூன் 27 வரை விடுதலைப் புலிகள் வெளியிட்ட உத்தியோக பூர்வ தகவல்களின் அடிப்படையில் 356க்கு மேற்பட்ட கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

2008 ஜூன் வரை விடுதலைப்புலிகள் அமைப்பு வெளியிட்ட உத்தியோகபூர்வப் பட்டியலில் 356 கரும்புலிகள் வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2009 மே மாத இறுதிப்போர் வரை நிகழ்ந்த தாக்குதல்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை 379 அல்லது அதற்கும் சற்றே அதிகமாக இருக்கும் .அந்த வகையில் தரைக் கரும்புலிகளாக 59 ஆண்களும் 18 பெண்களுமாக 77 பேரும் கடற்கரும்புலிகளாக 140ஆண்களும் 56 பெண்களுமாக 196 பேரும் வான் கரும்புலிகளாக 2 ஆண்களும் ஏனைய உளவு நடவடிக்கைகள் இதர தாக்குதல்களில் - 104 கருப்புலிகளுமென 379 கரும்புலிகள் தமது உயிர்களை "தற்கொடை" செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் கரும்புலித் தாக்குதல்களை "தற்கொலை" தாக்குதல் என்று அழைப்பதில்லை. மாறாக, அதனை "தற்கொடை" அல்லது "உயிராயுதம்" என்றே குறிப்பிட்டனர். விரக்தியிலோ, மத நம்பிக்கையின் அடிப்படையிலோ, அல்லது மரணத்திற்குப் பின் கிடைக்கும் சொர்க்கத்தை நம்பியோ அவர்கள் இந்த முடிவை எடுப்பதில்லை. "தங்களது மண்ணின் விடுதலைக்காகவும், மக்களின் பாதுகாப்புக்காகவும், தங்களை முழுமையாக அழித்துக் கொண்டு எதிரிக்கு பெரும் சேதத்தை விளைவிப்பது" என்ற அரசியல் இலட்சியவாதமே கரும்புலிகளின் உந்துசக்தியாக இருந்தது.



போரியல் சமநிலையை மாற்றிய உயிராயுதங்களாகவே கரும்புலிகள் இருந்தனர். இராணுவ ரீதியாகப் பலம் வாய்ந்த எதிரியை எதிர்கொள்ள, கரும்புலிகள் தங்களையே நகரும் வெடிகுண்டுகளாக மாற்றினர். எதிரியின் பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் புகுந்து, தளபதிகள் மற்றும் இராணுவ இலக்குகளை தரைக்கரும்புலிகள் அழித்தனர். படகுகளில் வெடிபொருட்களை நிரப்பி, இலங்கை கடற்படையின் பிரம்மாண்டமான அதிவேகத் தாக்குதல் படகுகள் மற்றும் விநியோகக் கப்பல்கள் மீது மோதி அவற்றை கடற்கரும்புலிகள் அழித்தனர். கடலில் புலிகளின் ஆதிக்கத்தை நிலைநாட்ட இவர்களின் தியாகமே அடித்தளமாக அமைந்தது.

உலக வரலாற்றில் தற்கொலைப்படைத் தாக்குதல்களில் பெண்களை மிக அதிக அளவில் பயன்படுத்தியவர்களாக விடுதலைப்புலிகளே இருந்தனர். ஆண் போராளிகளுக்கு நிகராகப் பெண் போராளிகளும் மிகக் கடினமான உளவு வேலைகளிலும், கடற்பரப்பிலும், தரைவழித் தாக்குதல்களிலும் கரும்புலிகளாகச் செயல்பட்டனர். பல சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள் கரும்புலிகளை "உலகின் மிக ஒழுக்கமான மற்றும் நேர்த்தியான தற்கொலைப்படை" என்று விவரித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் "கரும்புலிகள்", இராணுவ ரீதியாக இலங்கை ஆயுதப் படைகளுக்கு மிகப்பெரிய சவாலாகவும் சிம்ம சொப்பனமாகவும் விளங்கினர். போர்க்களத்தில் நேரடி மோதல்களில் ஈடுபடுவதை விட, கரும்புலிகள் நடத்திய தற்கொடைத் தாக்குதல்கள் இலங்கை இராணுவத்தின் வியூகங்களை பலமுறை சிதறடித்தன. இலங்கை இராணுவத்தின் முக்கிய தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள். இராணுவ தலைமையகங்கள், விமானப்படைத்தளங்கள், விமான நிலையங்கள் கரும்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன.

கரும்புலிகள் பிரிவு குறித்தும் அவர்களின் தாக்குதல் திறன் குறித்தும் பல்வேறு காலகட்டங்களில் தங்களது கருத்துக்களையும், இராணுவ ரீதியான மதிப்பீடுகளையும் இலங்கை இராணுவத்தளபதிகளே வியந்து வெளிப்படுத்தியுள்ளனர்.


பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

2006 ஆம் ஆண்டு கொழும்பு இராணுவத் தலைமையகத்திற்குள் புகுந்து பெண் கரும்புலி ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அப்போதைய இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா படுகாயமடைந்து உயிர் தப்பினார். பின்னர் அது குறித்துப் பேசுகையில், "எதிரியின் உளவுப் பிரிவும் கரும்புலிகளும் இராணுவத்தின் மிக உயர்ந்த பாதுகாப்பு வளையத்திற்குள்ளும் ஊடுருவும் அசாத்தியத் திறன் கொண்டவர்களாக இருந்தனர். கரும்புலிகள் சாதாரண தற்கொலைப்படையினர் அல்ல. அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பயிற்றுவிக்கப்பட்ட, கடுமையான இலக்கு நோக்கிய உளவுப் படையினர்" என்று கூறியிருந்தார்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ

இலங்கை இராணுவத்தளபதிகளில் விடுதலைப்புலிகளுக்கு மிகப்பெரும் சவாலாக இருந்தவர் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ. ஈழப்போரின் ஆரம்பக் கட்டங்களில் (1990களின் துவக்கத்தில்) இலங்கை இராணுவத்தின் மிகச்சிறந்த வியூகவாதியாகக் கருதப்பட்டவர். 1987இல் வடமராட்சியை மீட்பதற்காக நடத்தப்பட்ட இந்த மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையான ஒபரேஷன் லிபரேஷனில் முக்கிய பங்காற்றியவர் அதேபோன்று 1991இல் புலிகளின் முற்றுகைக்குள் இருந்த ஆனையிறவு இராணுவ முகாமை மீட்பதற்காக நடத்தப்பட்ட இலங்கை இராணுவத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இராணுவ நடவடிக்கையான "ஒபரேஷன் பலவேகய"வுக்கு தலைமை தாங்கியவர் .ஆகஸ்ட் 8, 1992 அன்று, யாழ்ப்பாணம் அராலி முனையில் அவர் பயணித்த லேண்ட் ரோவர் வாகனம் விடுதலைப்புலிகளின் நிலக்கண்ணிவெடியில் சிக்கியது. இந்த தாக்குதலில் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன, அட்மிரல் மோகன் ஜயமஹா உட்பட 10 உயர்மட்ட ராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இந்த லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கரும்புலிகள் தொடர்பில் விபரிக்கையில், "கரும்புலிகளின் தாக்குதல்கள் இராணுவத்தின் "மன உறுதியை குலைக்கும் ஆயுதம்" (Psychological Weapon). சாதாரணப் போரில் மரண பயம் இருக்கும், ஆனால் மரணத்தையே ஆயுதமாக ஏந்திவரும் ஒரு படையணியை எதிர்கொள்வது சாதாரண சிப்பாய்களுக்கு மிகப்பெரிய உளவியல் நெருக்கடியை உருவாக்குகிறது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.




(தொடர்ச்சி 17 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் நகர பேருந்து நிலைய பகுதியில் பிரபல தொழிலதிபர் முஹமட் பாஹிமை தாக்கியது தொடர்பாக பழக்கடை உரிமையாளர் கைது



(2-07-2026)

மன்னார் நகர பேருந்து நிலைய பகுதியில் அமைந்துள்ள உணவகத்துடன் கூடிய பழ விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளரான தொழிலதிபருமான முஹமட் பாஹீம் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவம் 2ம் திகதி அன்று வியாழக்கிழமை மதியம் 1 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளரின் சகோதரனும் மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் பழக்கடை நடத்தி வருபவருமான நபரை மன்னார் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நபருடன் இணைந்து மேலும் இருவர் குறித்த தொழிலதிபரை தாக்கும் சி.சி.ரிவி வீடியோ (CCTV) காட்சி வெளியாகியுள்ளன.

தாக்குதலுக்கு உள்ளான தொழிலதிபர் முஹமட் பாஹிம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இருவருக்கும் இடையில் பழங்கள் விற்பனையில் ஏற்பட்ட நீண்ட கால தகறாறு காரணமாகவே குறித்த தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அம்பாறையில் இடம்பெற்ற 6 மனித படுகொலைகள் தொடர்பாக இனியபாரதிக்கு இம்மாதம் 8ம் திகதி வரை மட்டக்களப்பு சிறையில் விளக்கமறியல்

திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் உள்ளிட்ட 6 பேரின் படுகொலைகள் தொடர்பாக சிஐடி யினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடை சட்டத்தில் வைக்கப்பட்டிருந்த ரி.எம்.வி.பி கட்சி அம்பாறை மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமாரை எதிர்வரும் 8ம் திகதி வரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் 2ம் திகதி அன்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 2007ம் ஆண்டு ஜூன் 28ம் திகதி திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் விநாயகபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து திருக்கோவிலுள்ள பிரதேச சபையை நோக்கி பிரயாணித்த போது அவரை விநாயகபுரம் கோரக்களப்பு வீதியில் வைத்து இனம் தெரியாத துப்பாக்கிதாரிகள் படுகொலை செய்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக அவரது மனைவியார் படுகொலை செய்யப்பட்ட தனது கணவருக்கு நீதி கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் இந்த விசாரணை கடந்த கால அரசாங்கத்தினால் கிடப்பில் இருந்து வந்துள்ளது.

இதையடுத்து இந்த படுகொலை செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக அவரது மனைவியர் கடந்த 2025ம் ஆண்டு சிஜடி யினரிடம் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அவர்கள் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் இதனுடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்ட பொறுப் பாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார் கடந்த 2025 ஜூலை 6ம் திகதி திருக்கோவில் வைத்தும் அவரது சகாவான சசிதரன் தவசீலன் மட்டு சந்திவெளியில் வைத்தும் கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இவர்களை சிஜடி யினர் பயங்கரவாத தடைச் சட்டத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் 2005 தொடக்கம் 2009 வரையிலான காலப்பகுதியில் அம்பாறை திருக்கோவிலை மையமாக வைத்து திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 6 மனித படுகொலைகள் தொடர்புட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து ஒரு வருட காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வைத்திருந்த இவரை சிஜடியினர் இவருக்கு எதிராக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் இன்று வியாழக்கிழமை (02) முன் நகர்வு பத்திரம் ஊடாக வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.



இதேவேளை கடந்த 2005 தொடக்கம் 2009 வரை காலப்பகுதியில் திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் பகுதியில் பலர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக காணாமல் போன உறவுகள் இனியபாரதி மீது குற்றம் சாட்டி வருவதுடன் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பூகோள அரசியல் மற்றும் இந்தியாவின் நலன் கருதி. யாழ்ப்பாணம் தீவகத்தில் சீன நிறுவனங்களின் வருகையை தடுத்தவர் டக்ளஸ்

பூகோள அரசியலில் இந்தியாவின் நலன்கள் பாதிக்கப்படும் வகையிலான திட்டங்களை இடமளிக்க கூடாது என்ற டக்ளஸ் தேவானந்தாவின் உறுதியான நிலைப்பாடு பெடுந்தீவில் பரிணமிக்கும் கலப்புமுறை மின் உற்பத்தி திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், தீவகத்தின் இருப்பை பாதுகாப்பதற்கும் வாழ்வியலை மேம்படுத்துவதற்கும் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களுள் மிகவும் அற்புதமான - பெயர் சொல்லக்கூடிய திட்டமாக இந்த மீள் புதுப்பிக்கத்தக்க கலப்பு முறை மின்சார உற்பத்தி திட்டம் அமைந்துள்ளதாகவும் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் நிதியுதவியில், நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் குறித்த மின் உற்பத்தி திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில், நெடுந்தீவில் முன்னெடுக்கபட்டு வருகின்ற கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்து வெளியிடும்போதே, ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகச் செயலாளரினால் குறித்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்: நெடுந்தீவின் வளர்ச்சியில் தொடர்ந்தும் தீவிர கவனம் செலுத்தி வருகின்ற ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அன்று மின்சாரம் இன்றி இருண்டு கிடந்த நெடுந்தீவிற்கு ஒளியூட்டும் நோக்கோடு 1996 ஆண்டு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மின்பிறப்பாக்கி ஒன்றினை எடுத்துச் சென்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மின்சாரப் பாவனையை ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் 2001 ஆண்டு புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலத்தில் மின்சார சபை மூலம் பாரிய மின்பிறப்பாக்கியை பொருத்தி தொடர்ச்சியான மின் விநியோகத்தினை உறுதிப்படுத்தினார்.

எனினும், மின்பிறப்பாக்கியை செயற்படுத்துவதற்கான எரிபொருள் கடல் வழியாக எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால், மின் உற்பத்திச் செலவு அதிகமா இருந்துவந்த நிலையில், கடந்த அரசாங்கத்தில் கடற்றொழில் அமைச்சராக பணியாற்றிய டக்ளஸ் தேவானந்தா, தீவகத்திற்கு குறைந்த விலையில் நிலையான மின்சார விநியோத்தை உறுதிப்படுத்தும் வகையில் பாரிய வேலைத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

குறித்த திட்டத்தினை அரச - தனியார் கூட்டு முதலீட்டில் அமைப்பதற்கு தீர்மானித்த கடந்த கால அரசாங்கம், தனியாருக்கான விலைமனுக் கோரலை வெளியிட்டிருந்தது.

அதனடிப்படையில், சீனாவை தளமாக கொண்ட தனியார் நிறுவனத்திற்கு குறித்த திட்டத்தினை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபித்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் பூகோள அரசியல் விவகாரம் இருக்கின்ற நிலையில், தீவகத்தில் சீன நிறுவனத்திற்கு குறித்த வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கான வாய்ப்பினை வழங்குவது, இந்தியாவின் நலனுக்கு பாதகமாக அமைந்து விடும் என்ற கருத்தினை முன்வைத்த நிலையில் குறித்த தீர்மானம் இரத்து செய்யப்பட்டது.

அதேவேளை, தீவகத்தில் முன்னெடுக்க திட்டமிட்ட மீள்புதுப்பிக்கத்தக்க கலப்பு முறை மின்சார உற்பத்தி திட்டத்திற்கு முழுமையான நிதியுதவி வழங்கி அதனை அமைத்து தருவதற்கு இந்திய அரசாங்கம் சம்மதம் தெரிவித்தது.

அதனடிப்படையில், கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமாணப் பணிகள் தற்போது நிறைவு கட்டத்தினை அடைந்துள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது“ எனவும் தெரிவிக்கப்பட்டது.



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1203



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருநந்தீஸ்வரம்
## இரத்மலானை, கொழும்பு

*" எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என் வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. "*

ஈழத்தமிழரின் ஆதிவரலாற்றை விளக்கும் தொன்மைமிகு சான்றாகக் காணப்படுபவை ஈழத்தின் இந்துக் கோவில்களாகும். பிற மதங்களின் வருகையால் இக்கோவில்கள் மண்ணோடு மண்ணாகி அழிக்கப்பட்டமை வரலாறு கூறும் உண்மையாகக் காணப்படுகின்றது. ஈழத்தின் ஆதிகால வரலாற்றை நோக்கும்போது ஈழத்தை இராவணன் என்னும் அரசன் ஆண்டான் என்றும், இம்மன்னன் சிறந்த சிவபக்தன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறந்த தழிழ் அறிவும், இசை ஞானமும் மிக்கவனாக இம்மன்னன் விளங்கியுள்ளான். இராவணனைப்பற்றிக் கூறும் இராமாயணத்தை இதிகாசக்கதை என்று கூறியபோதிலும், இராமாயணத்திலே கூறப்பட்டுள்ள அதே இடங்கள் அதே பெயருடன் தற்காலத்திலும் விளங்குவது புதுமையே. திரு காமினி புஞ்சிகாவ என்னும் ஸ்ரீலங்காவின் வரலாற்று ஆய்வாளர் இராமாயண காலம் கி.மு 3500 ஆண்டுகள் எனக் குறிப்பிட்டுள்ளார். The International Society for the Investigation Of Ancient Civilization வெளியிட்ட Ancient India என்ற நூலிலே, இராமாயண காலம் கி.மு 4400 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்களை நாகர், இயக்கர் எனவும் குறிப்பிடுவர். தமிழர்களின் மூதாதையர்களான இம் மக்கள் சிவபக்தி கொண்டவர்களாக வாழ்ந்தமைக்கு, இக்காலப்பகுதியிலே காணப்பட்ட ஈஸ்வரங்களே சான்றாகக் காணப்படுகின்றது. முன்னேஸ்வரம் இராமாயண காலத்திற்கு முற்பட்டதென்பது ஆய்வாளர் கருத்தாகக் காணப்படுகின்றது. இக்குறிப்புக்கள் தமிழ் மக்கள் இக்காலப்பகுதியில் சிவ வழிபாட்டைப் பின்பற்றி வாழ்ந்துள்ள தொன்மைமிகு குடிகள் என்பதைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறான பல தொன்மை மிகு ஆலயங்கள் மண்ணோடு மண்ணாகப் புதைந்து காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் இவ்வாறு மண்ணுள் புதைந்து தற்போது வெளிப்பட்டுள்ள இரத்மலானையிலுள்ள திருநந்தீஸ்வரமும், வரலாற்றுப் பெருமையுடைய ஆலயமாகக் காணப்படுகின்றது.

தமிழரின் தாயகமாகக் கருதப்படும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்த வரலாற்றுக் காலத்திற்கு முந்திய, இதிகாச காலமாகிய இராமாயண காலத்தில் சிறப்புற விளங்கிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பல திருத்தலங்கள், ஐரோப்பியர் வருகையால் சிதைத்தழிக்கப்பட்டன. ஆயினும் காலத்திற்குக் காலம் அவை மீளமைக்கப்பட்டபோதிலும், தற்காலத்திலும் பல வகையிலும் பாதிப்புடையனவாகவே விளங்குகின்றன. இவ்வாறான ஆலயங்கள் தமிழீழப் பிரதேசங்களில் அமைந்துள்ளமையால் இவற்றின் வரலாற்றுச் சிறப்பை அழித்து விட முடியவில்லை.

கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையுள் காலடி வைத்த போத்துக்கேயர் தமது மதத்தைப் பரப்பும் நோக்குடன், ஈழமெங்குமுள்ள சிவாலயங்களை அழிப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டனர். ஐரோப்பியர் இலங்கைக்கு வந்த காலத்திலே, ஈழத்திலே மூன்று இராச்சியங்கள் காணப்பட்டுள்ளன. அவை கோடடை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்பாண இராச்சியம் என அழைக்கப்பட்டன. இன்றைய கொழும்பு மாவட்டம், கோட்டை இராச்சியத்தின் பரிபாலனத்தின் கீழ் காணப்பட்டுள்ளது. இப்பகுதியிலே பல சிவாலயங்கள் காணப்பட்டுள்ளன.

கி.பி 1519 ஆம் ஆண்டு அன்றைய கோட்டை இராச்சியத்திலிருந்த சிவாலயங்கள் அனைத்தும் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டுச் சூறையாடப்பட்டன. இவ்வாறு சூறையாடப்பட்டு அழிக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாகக் காணப்படுவது, இரத்மலானை திருநந்தீஸ்வரமாகும். கொழும்பு மாவட்டத்தின் தென்பகுதியில், இரத்மலானையில் தற்காலத்தில், கொனாகோயில என்று சிங்களத்திலே வழங்கப்படும் சிற்றூரிலே இருந்த, மிகப் பெரும் சிவாலயம் கி.பி 1519 ஆம் ஆண்டு போத்துக்கேயரால் சிதைக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் மண்ணுள் மறைந்திருந்த சிவாலயச் சின்னங்கள் தற்காலத்தில் வெளிவர ஆரம்பித்துள்ளது. இவற்றின்மூலம் மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் பல நூற்றாண்டுகால வரலாற்றுப் பெருமையும் வெளிவர ஆரம்பித்துள்ளதெனக் கூறலாம். சில ஆண்டுகளுக்கு முன் சில தேவைகளின் நிமித்தம் நிலத்தை அகழ்ந்தபோது, ஆவுடையாரும், நந்தியும் வெளிவந்துள்ளன. கருங்கல்லாலான அளவில் பெரிய ஆவுடையாரைத் தட்டிப் பார்க்கும்போது, வெண்கலஓசை எழுந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அகழும்போது ஏற்பட்ட தாக்கத்தால் நந்தி பாதிப்படைந்துவிட்டது. ஆவுடையார் எவ்வித பாதிப்புமின்றி மீட்கப்பட்டுள்ளது. அகழ்ந்த பகுதியிலுள்ள ஆலமரம் தலவிருட்சமாகவும், பழமையின் சின்னமாகவும் கருதப்படுகின்றது. தற்காலத்தில் இக்கோயிலை எருதுடன் தொடர்புடைய கதிர்காமக்கோயில் என்று சிங்கள மக்கள் குறிப்பிடுகின்றனர். இந்து சமயத்திலே எருதினை இடபம் எனவும் அழைக்கும் மரபுண்டு.

சிவாலய வழிபாட்டிலே திருநந்திதேவருக்கு முக்கிய இடமுண்டு. நந்தியைப்பற்றிய வரலாறுகள் புராணங்களிலே தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. நந்தியில்லாத சிவாலயத்தைச் சிவாலயமாகக் கருத முடியாது. நந்தியின் திருவுருவம், சுவாமியின் சந்நிதியிலேயே இடம்பெறும். தென்னிந்தியக்கோவில்களில் பிரகாரங்களைக் கடக்கும்போது, பிரமாண்டமான உருவங்களையுடைய பல நந்திகளைப் படிப்படியாகக் கடந்து உள்ளே செல்லும் நிலையில் அமைத்துள்ளனர். பூசைக்குரிய நந்திதேவர் இறைவன் சந்நிதானத்தில் இறைவனுக்கு நேரே அமர்ந்திருப்பதைக் காணலாம்.

**வளரும்..**

*(15 பக்கத் தொடர்ச்சி)*

## *எதிரிகளை கலங்கடிக்க எம்மினத்தில் உதித்த "உயிராயுதங்கள்"!*

---

*அட்மிரல் வசந்த கரன்னாகொட.*

*இலங்கை கடற்படைபயின் தளபதியாக இருந்தவர் அட்மிரல் வசந்த கரன்னாகொட. கடற்கரும்புலிகள் இலங்கை கடற்படைக்கு விளைவித்த அழிவுகள் குறித்து தனது* "Aduran wevu duka" (Shaping the Sea) *என்ற புத்தகத்திலும் பேட்டிகளிலும் விரிவாகப் பேசியுள்ளார்: கடலில் இலங்கை கடற்படையின் பிரம்மாண்டமான "டோரா" அதிவேகத் தாக்குதல் படகுகளை, சிறிய வெடிகுண்டுப் படகுகள் மூலம் கடற்கரும்புலிகள் தகர்த்த விதம் கடற்படைக்கு பெரும் சவாலாக இருந்தது "புலிகளின் கடற்கரும்புலிகள் மரணத்தைப் பற்றி பயப்படாதவர்களாக இருந்தனர். எங்களின் நவீன ரகக் கப்பல்களை நோக்கி தங்களின் வெடிமருந்துப் படகுகளை அதிவேகமாகச் செலுத்தி மோதும் அவர்களின் துணிச்சல், எமது கடற்படையினருக்கு எப்போதும் ஒரு பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது" என்று குறிப்பிட்டிருந்தார்.*

*மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன*

*இலங்கை இராணுவத்தின் தளபதியாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலராகவும் இருந்தவர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன. விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரில் 53 ஆவது படையணியை வழிநடத்திய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, தனது "நந்திக்கடலிற்கான பாதை"* (Road to Nandikadal) *என்ற நூலில் விடுதலைப்புலிகளின் போரிடும் குணம் பற்றி எழுதியுள்ளார். அதில் கரும்புலிகள் அமைப்பின் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு இராணுவத்தினரையே வியக்க வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிடிபட்டால் அமைப்பின் இரகசியங்கள் வெளியே கசிந்துவிடக் கூடாது என்பதற்காக, கழுத்தில் சயனைட் குப்பியைத் தொங்கவிட்டுக்கொண்டு, சாவைக் கண்டும் அஞ்சாமல் இலக்குகளை நோக்கி முன்னேறும் கரும்புலிகளின் மன உறுதி மிக உக்கிரமானது என்று பதிவு செய்துள்ளார்.*

*இராணுவத்தின் உளவுத்துறை*

*இலங்கை இராணுவத்தின் உளவுத்துறை கரும்புலிகள் பற்றித் தயாரித்த அறிக்கைகளில் சில முக்கிய உண்மைகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன. கரும்புலிகள் ஏதோ ஒரு போதைப்பொருளின் தாக்கத்திலோ அல்லது மூளைச்சலவை செய்யப்பட்டோ தாக்குதலுக்கு வருவதில்லை. அவர்கள் முழு சுயநினைவோடும், திட்டமிட்ட வரைபடங்களோடும் மிகத் துல்லியமாகத் தாக்குதலை நடத்துகிறார்கள். குறிப்பாக, கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் (2001) மற்றும் அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீதான எல்லாளன் நடவடிக்கை (2007) ஆகியவற்றில் கரும்புலிகள் காட்டிய இராணுவ நேர்த்தி, உலகின் மிகச்சிறந்த கொமாண்டோப் படைகளுக்கு இணையானது என்று அவர்களினால் மதிப்பிடப்பட்டது.*

*இவ்வாறாக எதிரிகள் புகழ்ந்த மதித்த, ஆச்சரியப்பட்ட, கதிகலங்கிய பலம் வாய்ந்த ஆயுதமே கரும்புலிகள். இவர்கள் தமிழ் இனத்தின் தற்காப்பு கவசங்கள். விடுதலைக்கான போராட்ட பாதையின் தடைநீக்கிகளாக இருந்தவர்கள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறிந்த நெருப்புமனிதர்கள். கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் கான் விரும்பிய ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள். ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலித்தான் தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிதான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருந்தான்.*

*ஒரு தேசத்தின் விடுதலை என்பது வெறும் ஆயுதங்களால் மட்டுமே வென்றெடுக்கப்படுவதில்லை. அது தங்களை முழுமையாக அர்ப்பணிக்கத் துணியும் உன்னத மனிதர்களின் உயிர்க் கொடையினாலும் கட்டியெழுப்பப்படுகிறது. அந்த வகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் "கரும்புலிகள்" என்னும் தற்கொடைப் படையணி, உலகின் இராணுவ வரலாறுகளையே வியக்க வைத்த ஒரு தனித்துவமான சக்தியாகும்.*

*தம்மால் வெல்லவே முடியாது என்று எதிரி நினைத்த பிரம்மாண்டமான இராணுவ இலக்குகளை, தங்களின் உடல்களையே ஆயுதமாக்கித் தகர்த்தெறிந்தவர்கள் கரும்புலிகள். மரணம் என்பது மனிதர்களுக்குப் பொதுவானது என்றாலும், அந்த மரணத்தையே ஒரு போரியல் வியூகமாக மாற்றி, இலட்சியத்திற்காகத் தங்களை அழித்துக்கொள்ள முன்வந்த இவர்களின் அர்ப்பணிப்பு ஈடு இணையற்றது. "தற்கொலைப்படை" என்ற உலகளாவிய பொதுப் பார்வைகளுக்கு அப்பாற்பட்டு, "தற்கொடைப்படை" என்ற உன்னதத் தியாகக் கோட்பாட்டோடு களமாடிய கரும்புலிகளின் வரலாறு, உலகில் விடுதலைக்க போராடிய இயக்கங்கள், அமைப்புக்களின் வரலாறுகளைவிடவும் மிக ஆழமானது,உணர்வுபூர்வமானது.*

*எத்தனையோ கரும்புலிகள் தமது முகத்தையோ, முகவரியையோ, காட்டாமல், தமக்கென சுயநல பெருமை தேடாமல் தமிழ்த் தேசத்தின் இருப்பை நிலை நாட்ட அடையாளம் மறைத்து தமிழீழ விடுதலைக்கு தமது அர்ப்பணிப்பாலும் செயலாலும் தம்மை உரமாக்கி தமிழினத்தின் வரலாற்றில் தம்மை அழியாத அடையாளமாய் இட்டுச் சென்றுள்ளார்கள். இமாலய சாதனைகளை படைத்து வீரகாவியமாகி இன்றும் வெளியில் தெரியா வீர மறவர்களாக ஈழவரலாற்றுப் பக்கங்களில் மறைந்து கிடக்கும் தேசப்புயல்கள் கரும்புலிகள். வரையப் படாத சித்திரங்களாகவும் எழுதப்படாத சரித்திரங்களாகவும் தம்ளர் விடுதலைக்காக உயிராயுதங்களான அந்த அற்புதமான "தற்கொடை" தியாகிகளை கரும்புலிகள் நாளில் நெஞ்சில் நிறுத்துவோம்.*

உலக செய்திகள்
World News

# அரியானாவில் 220 அடி ஆழம் கொண்ட ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்த 4 வயது குழந்தை சடலமாக மீட்டனர்



அரியானாவில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்த 4 வயது குழந்தையை சடலமாக மீட்டனர். அரியானா மாநிலம் அம்பாலா மாவட்டத்தில் உள்ள தனே-ரரா என்ற கிராமத்தை சேர்ந்தவர் மன்ஜித். விவசாயியான இவர், தனது 4 வயது மகன் நிர்வேர் சிங்கை அழைத்துக் கொண்டு காலை 6.30 மணிக்கு தோட்டத்திற்கு சென்றார். அங்கு அவர் தோட்ட வேலைகளை பார்த்துக் கொண்டிருந்த போது நிர்வேர் சிங், சற்று விலகிச் சென்று விளையாடிக் கொண்டிருந்தான்.

இந்நிலையில், அங்கு மூடப்படாமல் இருந்த ஆழ்துளை கிணற்றுக்குள் தவறி விழுந்தான். அவனது அலறல் சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்த்த மன்ஜித், தனது மகன் ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்ததை அறிந்து பதறிப்போனார். உடனடியாக அக்கம்பக்கத்தினரை அழைத்து தனது மகனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் சுமார் 220 அடி ஆழம் கொண்ட அந்த ஆழ்துளை கிணற்றில் இருந்து நிர்வேர் சிங்கை அவர்களால் மீட்க முடியவில்லை. இதையடுத்து, காலை 7.30 மணியளவில் மீட்புப் படையினருக்கு இது தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தேசிய, மாநில மீட்புப் படையினர் மற்றும் ராணுவ வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். சுமார் 21 மணி நேர போராட்டத்திற்குப் பிறகு, அதிகாலை 3.40 மணி-யளவில் நிர்வேர் சிங்கை மீட்புப் படையினர் மீட்டனர். ஆனால் குழந்தைக்கு சுயநினைவு இல்லை. இதையடுத்து குழந்தை நிர்வேர் சிங், உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அங்கிருந்த மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆழ்துளை கிணற்றில் 4 வயது குழந்தை தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆழ்துளை கிணற்றை மூடாமல் வைத்திருந்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க துணை ஆணையர் அஜய் தோமர் சிங் காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.



# லெபனானில் ஹிஸ்புல்லா அச்சுறுத்தல் இருக்கும் வரை இஸ்ரேல் ராணுவமும் இருக்குமென நெதன்யாகு கூறினார்

லெபனானில் ஹிஸ்புல்லா அச்சுறுத்தல் இருக்கும் வரை இஸ்ரேல் ராணுவமும் இருக்குமென நெதன்யாகு கூறினார். இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, தெற்கு லெபனானில் பாதுகாப்பு மண்டல பகுதிக்கு சென்று பார்வையிட்டார். அப்போது அவர் வீரர்களிடம் கூறும்போது, லெபனானில் நீங்கள் மிக பெரிய வேலையை செய்திருக்கிறீர்கள். நீங்கள் பாதுகாப்பு மண்டல பகுதிகளை உருவாக்கி உள்ளீர்கள் என்றார். அதுவும் நம்முடைய பகுதியில் அல்ல. அவர்களுடைய பகுதியில். லெபனானில் நாம் இதனை செய்து வருகி-றோம். கடந்த காலங்களில் காசாவிலும் இதனை செய்தோம் என கூறினார். நம்முடைய எல்லை பகுதியில் பயங்கரவாத ராணுவம் இருப்பதற்கு நாம் அனுமதிப்பது இல்லை என்பதே இதற்கு அர்த்தம். அவர்களை நாம் வெளியேற்றி வருகிறோம். அதனையே நீங்கள் செய்து வருகிறீர்கள் என்றார். லெபனானில், ஆயுதங்களுடன் ஹிஸ்புல்லா அமைப்பின் அச்சுறுத்தல் நமக்கு இருக்கும் வரை இஸ்ரேல் ராணுவமும் இருக்கும். அந்த அச்சுறுத்தல் நீக்கப்படும் வரை நாம் தெற்கு லெபனானை விட்டு செல்லமாட்டோம் என்றும் நெதன்யாகு கூறினார்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற போக்குவரத்து தொடர்பாக ஈரான் அதிபருடன் இந்திய பிரதமர் மோடி தொலைபேசியில் பேசினார்



ஈரான் அதிபருடன் இந்திய பிரதமர் மோடி தொலைபேசியில் பேசின-ார். இது குறித்து ஈரான் அதிபருடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற போக்குவரத்து மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தியுள்ளார். ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28-ந்தேதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம் திடீரென போர் தொடுத்தன. இதில் முதல் நாளி-லேயே ஈரான் உச்சபட்சத்தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீதும், இஸ்ரேல் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இதற்கிடையில் அமெரிக்காவும், ஈரானும் கடந்த ஜூன் 17-ந்தேதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதில் ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் விதித்திருந்த கட்டுப்பாடுகளை நீக்குவது, அப்பகுதியில் அமெரிக்கா ராணுவ நடவடிக்கைகளை குறைப்பது, பொருளாதார தடைகளில் இருந்து நிவாரணம் அளிப்பது, ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான விவகாரத்திற்குத் தீர்வு காண 60 நாள் காலக்கெடு வழங்குவது உள்ளிட்ட ஒப்பந்தங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகும், ஹார்முஸ் ஜலசந்தியில் வர்த்தகக் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக கூறி, அமெரிக்கப் படைகள் ஈரான் ராணுவ படைத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இதற்குப் பதிலடியாக, ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படை, பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களைத் தாக்கியது. இந்த தாக்குதல்கள் தொடர்ந்தால் மேலும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்த நிலையில், அமெரிக்காவின் எந்தவொரு அடுத்தகட்ட நடவடிக்கையும் பேச்சுவார்த்தைகளை முழுமையாக நிறுத்திவிடும் என்று ஈரா-னிய அதிகாரிகள் தெரிவித்தனர். அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் இந்த தாக்குதல்களால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த சூழலில், போரின் முதல் நாளில் கொல்லப்பட்ட ஈரான் உச்ச தலை-லவர் அயத்துல்லா அலி காமேனியின் இறுதிச் சடங்கு வரும் 5-ந்தேதி முதல் 9-ந்தேதி வரை நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில், பிரதமர் மோடி ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இது தொடர்பாக "எக்ஸ்" தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் உரையாடினேன். பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்றதுடன், தொடர்ச்சியான முயற்சிகள் மத்திய கிழக்கு பகுதியில் நீடித்த அமைதியை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தேன். ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்து இந்தியாவிற்கும், உலகத்திற்கும் முக்கியமானது என்பதை மீண்டும் வலியுறுத்தினேன்" என்று பதிவிட்டுள்ளார்.



# பயங்கரவாதத் தடைச் சட்டம் இவ்வருடம் "அடியோடு" இரத்து!

## ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்க 2 மாதங்களில் புதிய சட்டமூலம் வருகின்றது என்கின்றார் பிரதி அமைச்சர்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்களுக்கு ஆதரவளித்த அரசியல் தரப்பினர் இந்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதில் ஆச்சரியமேதுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் 1ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: ”அரசியல் அநாதைகளாக இருந்தவர்கள் தற்போது சுரேஷ் சலேவின் விவகாரத்தைக் கையில் எடுத்து, அவருக்குச் சார்பாகப் பேசி வருகின்றார்கள். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் குறித்த விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை இடைநிறுத்துமாறு கோரி ஒரு தரப்பினர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டால், அதற்காக விசாரணைகளை நிறுத்திவிட முடியாது. அவ்வாறு செய்தால், சட்டத்தின் மீது நாட்டு மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள்? சட்டத்தின் முன் எவருக்கும் விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது.

சுரேஷ் சலேவுக்காகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், மக்களுக்குப் போலியான விவரங்களைக் கூறாமல் நீதிமன்றத்தை நாடலாம். அங்கு தமது தரப்பு நியாயங்களை எடுத்துரைத்து நீதியைப் பெற்றுக்கொள்ளலாம். இதில் எங்களுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்துச் செய்யப்படும். தற்போது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களும் போதைப்பொருள் வர்த்தகமும் இன்னும் நீடிக்கவே செய்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான சட்டம் இயற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

இதற்கமையவே, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது. பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்தவும், போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கவும் அரசு கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும்." - என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வலிகாமம் வடக்கில் சொந்த மண்ணை மீட்க ஒன்றுபட்ட மக்கள்!

## "பலாலி மீள்குடியேற்ற அமைப்பு" ஊடாக இனி வரும் நாட்களில் நில மீட்புப் போராட்டங்கள் தீவிரம்!

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தங்களது பூர்வீகக் காணிகளை மீட்டெடுப்பதற்காக, அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து "பலாலி மீள்குடியேற்ற அமைப்பு" என்ற பெயரில் புதியதொரு அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் ஊடகங்களிடம் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி, கடந்த 36 வருடங்களாக பலாலி, மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் போன்ற பிரதேச மக்களின் குடியிருப்பு மற்றும் விவசாயக் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளது. இக்காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கடந்த காலங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித சாதகமான பலனும் கிடைக்கவில்லை.



எனவே, இந்த நில உரிமைப் போராட்டங்களை இன்னும் திட்டமிட்ட வடிவில் நலிவடையாது தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கும், எமது சொந்த நிலங்களை முழுமையாக மீட்டெடுப்பதற்கும் ஏதுவாகவே "பலாலி மீள்குடியேற்ற அமைப்பு" தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் எமது நில மீட்புக்கான அனைத்துச் செயற்றிட்டங்களும், போராட்டங்களும் இந்த அமைப்பின் ஊடாகவே முறைப்படி முன்னெடுக்கப்படும்." - என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் "கோமாளி" அர்ச்சுனாவின் எம்.பி. பதவி பறிபோகுமா?

## ஆகஸ்ட் 31 ஆம் திகதி விசாரணை




யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் பதவியிலிருப்பதற்கான தகைமையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான வாதங்களை விசாரணை செய்வதற்காக, மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 2026 ஆகஸ்ட் 31 ஆம் திகதியை நிர்ணயித்துள்ளது.

இவ்விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும், நீதியரசர்கள் குழாம் முழுமையடையாத காரணத்தினால் இதன் மீதான பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டது.

அபிநவ நிவஹல் பெரமுனவின் தலைவர் ஓஷல ஹேரத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்போது, அர்ச்சுனா இராமநாதன் இன்னும் அரச மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச சேவையிலிருந்து முறையாக இராஜிநாமா செய்யாமல் வேட்புமனுக்களைச் சமர்ப்பிப்பது நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தை மீறும் செயலாகும் என்று வாதிடும் மனுதாரர், அதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சட்டபூர்வமாகப் பதவியில் நீடிப்பதற்குத் தகுதியற்றவர் என அறிவிக்குமாறு நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

சினிமா

# மணிரத்னம் விஜய் சேதுபதி படத்தின் ஓடிடி உரிமையை நெட்பிளிக்ஸ் நிறுவனம் கைப்பற்றியது




இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்க உள்ள புதிய படத்தின் ஓடிடி உரிமத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் கைப்பற்றியது. இயக்குனர் மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் நடிகர் விஜய் சேதுபதி மற்றும் சாய்பல்லவி முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

சமீபத்தில், இந்தப் படத்திற்கு சாய் அப்யங்கர் இசையமைக்க உள்ளதாக சமூக ஊடகங்களில் வதந்திகள் பரவின. ஆனால், அது உண்மையல்ல என்றும், ஏ.ஆர்.ரகுமானே இசையமைப்பாளராக இருப்பார் என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.

மேலும், இந்த படத்திற்காக ஏற்கனவே ஒரு பாடலை ஏ.ஆர்.ரகுமான் அமைத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. 1992-ஆம் ஆண்டு வெளியான "ரோஜா" திரைப்படத்திலிருந்து மணிரத்னம் மற்றும் ஏ.ஆர்.ரகுமான் இணைந்து பணியாற்றி வருகின்றனர். முன்னதாக, "செக்க சிவந்த வானம்" திரைப்படத்தில் விஜய் சேதுபதி, மணிரத்னம் உடன் இணைந்து பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இயக்குனர் மணிரத்னம், விஜய் சேதுபதி மற்றும் சாய் பல்லவி கூட்டணியில் உருவாகவிருக்கும் புதிய திரைப்படத்தின் டிஜிட்டல் உரிமம் குறித்த முக்கிய பதிவேற்றம் வெளியாகியுள்ளது. தற்காலிகமாக "புரொடக்ஷன் நம்பர் 23" என்று பெயரிடப்பட்டுள்ள இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு வரும் ஜூலை மாதம் தொடங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. ஒரு அழுத்தமான காதல் கதையாக உருவாகவுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பாகவே, இதன் ஒட்டுமொத்த ஓடிடி உரிமத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் சுமார் 20 கோடி ரூபாய்க்கு கைப்பற்றியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# "அங்கீகாரம்" படத்தை இயக்குனர் பா.ரஞ்சித் பாராட்டினார்



"அங்கீகாரம்" படத்தை இயக்குனர் பா.ரஞ்சித் பாராட்டினார். ஸ்வஸ்திக் விஷன்ஸ் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் ஜே.பி. தென்பாதியான் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் "அங்கீகாரம்". இயக்குநர் பா. ரஞ்சித்தின் உதவி இயக்குநராக பணியாற்றிய ஜே.பி. தென்பாதியான், தடகள வீரர்களின் வாழ்க்கைச் சவால்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களை உண்மை சம்பவங்களின் அடிப்படையில் இந்தப் படத்தில் பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தின் மூலம் "அறம்", "அயலான்" உள்ளிட்ட படங்களை தயாரித்த தயாரிப்பாளர் கே.ஜே. ஆர் கதாநாயகனாக அறிமுகமாகிறார். அவருடன் சிந்தூரி விஸ்வநாத், விஜி வெங்கடேஷ், ரங்கராஜ் பாண்டே, மன்சூர் அலிகான், அஜித் கோஷி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜிப்ரான் இசையமைத்துள்ள இப்படம் உண்மை சம்பவ அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது. இப்படம் கடந்த 26ஆம் தேதி வெளியாகி பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. ரூ.5 கோடி பட்ஜெட்டில் உருவாகியுள்ள இந்த திரைப்படம் இதுவரை ரூ.40 லட்சம் வசூல் செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. படத்திற்கு பாசிட்டிவான விமர்சனங்கள் கிடைத்த போதிலும் போதுமான புரமோஷன் இல்லாததால், படத்தின் வசூல் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இந்த நிலையில் இப்படத்திற்கு பா.ரஞ்சித் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அங்கீகாரம் பெறத் துடிக்கும் எண்ணற்ற விளையாட்டு வீரர்களின் அசல் பிரதிபலிப்பாக இந்தப் படம் அமைந்துள்ளது. சுவாரஸ்யமான திரைக்கதையின் மூலம் இயக்குநர் ஜேபி தென்பதியான், தான் சொல்ல வந்த கருத்தை எந்த சமரசமும் இன்றி நேர்மையாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார். அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுகள். இந்தப் படத்திற்கு உறுதுணையாக நின்ற கேஜேஆர், நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகள். இந்த நல்ல படைப்புக்கு மக்கள் அனைவரும் தங்களது ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

# "பணம் இருப்பவர்களிடத்தில் மனம் இருக்காது, மனம் இருப்பவர்களிடத்தில் பணம் இருக்காது"

## முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியில் ஜெயரட்ணம் நுண்கலையகத்தை திறந்து வைத்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் வடக்கு மாகாணஆளுனர் தெரிவிப்பு



இன்றைய அதிகாரிகளிடத்தில் வேலை செய்யாமல் இருந்தால் பிரச்சினையில்லாமல் இருந்துவிட்டுப் போகலாம், அதிக வேலை செய்தால் அதிக பிரச்சினைகள் வரும் (No work - No problem; More work - More problem) என்ற எண்ணம் உருவாகி வருகின்றது. இதனால், எமது சமூகத்துக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் உரியவாறு பயன்படுத்திக் கொள்ளும் நிலை அருகி வருகின்றது, என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர்களின் அழகியல் சார் கலைகளை மேம்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட "ஜெயரட்ணம் நுண்கலையகம்" (18.06.2026) வியாழக்கிழமை அன்று காலை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நுண்கலையகமானது பெரும் மதிப்பிற்குரிய மருத்துவக் கலாநிதியும் கொடைவள்ளலுமான விமல் ஜெயரட்ணம் அவர்களின் முழுமையான நிதிப் பங்களிப்புடன், ஜெயரட்ணம் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய நான்கு துறைகளுக்கும் தனித்தனியான வகுப்பறைகளை உள்ளடக்கியதாக இரண்டு மாடிகளைக் கொண்டு இந்த நுண்கலையகம் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் த.தர்மராஜா அவர்களின் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் மற்றும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். இத்திட்டத்தின் கொடையாளரான மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, தேசியக் கொடி மற்றும் பாடசாலைக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. புதிய கட்டடத்தின் பெயர்ப்பலகையை ஆளுநர் அவர்கள் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தை மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசேட மேடை நிகழ்வில், இப்பாடசாலைக்கு கடந்த காலங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளை அமைத்துக் கொடுத்ததுடன், தற்போது இந்த நுண்கலையகத்தையும் நிர்மாணித்துக் கொடுத்த மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் மகத்தான சேவையைப் பாராட்டி, அவருக்கு "வாழும் வள்ளல்" விருது வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்துடன், தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்து மாணவர்களுக்கு மக்கள் இசையைப் பயிற்றுவித்த பாடகரும் நடிகருமான கருங்குயில் அவர்களால், மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களை வாழ்த்தி உருவாக்கப்பட்ட சிறப்புப் பாடலொன்றும் மாணவர்களால் இதன்போது இசைக்கப்பட்டது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய கௌரவ ஆளுநர் அவர்கள், "ஒரு பாடசாலைக்கு அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சமூகம் உதவி செய்வதுதான் வழமை. ஆனால், இந்தப் பாடசாலைக்கு விடுதிக் கட்டடங்கள் மற்றும் நுண்கலையகம் என்பவற்றை அமைத்துக் கொடுத்த விமல் ஜெயரட்ணம் அவர்களுக்கும், இந்தப் பாடசாலைக்கும், ஏன் இந்த மாவட்டத்துக்கும் கூட எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆனாலும் அவர் தனது சொந்த வீட்டைக்கூட விற்று இந்த மிகப் பெரிய உதவிகளைச் செய்திருக்கின்றார். பணம் இருப்பவர்களிடத்தில் மனம் இருக்காது, மனம் இருப்பவர்களிடத்தில் பணம் இருக்காது என்று சொல்வார்கள். ஆனால், விமல் ஜெயரட்ணம் அவர்களிடம் அவை இரண்டும் நிறைந்திருக்கின்றது. அவரது தியாகத்தைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளே போதாது.

தனது உரையில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்ட மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் யேசுதானந்தன் அவர்களால்தான் தான் இங்கே இவ்வளவு விடயங்களையும் செய்ததாகக் கூறினார். அது முற்றிலும் உண்மை. முன்னாள் அதிபர் யேசுதானந்தன் மிகச் சிறப்பான தலைமைத்துவத்தை இந்தப் பாடசாலைக்கு வழங்கியிருந்தார். அவர் அன்று "இந்த மேலதிக வேலைகள் எனக்கேன்?" என்று எண்ணியிருந்தால், இந்தப் பெரிய திட்டங்கள் பாடசாலைக்குக் கிடைத்திருக்காது. அதனால்தான், எல்லாமே "தலைமைத்துவத்தில்" தான் தங்கியிருக்கின்றது என நான் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றேன்.

எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தினால் வீணான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுமோ என்ற எண்ணம் அதிகாரிகளிடத்தில் அதிகரித்து வருகின்றமையால், மக்கள் அடைய வேண்டிய பல நன்மைகள் அவர்களைச் சென்றடைவதில்லை.

எனவே, மாணவர்களாகிய உங்களைச் சிறந்த தலைமைத்துவத்துடனும், ஆளுமையுடனும் வளர்த்துக்கொள்ளுங்கள் என்று நான் வலியுறுத்துகின்றேன். வெறும் புத்தகப் புழுக்களாக மாத்திரம் இருந்துவிடாமல், இந்தச் சமூகத்துக்குச் சேவை செய்யக்கூடியவர்களாக உங்களை நீங்களே வளர்த்தெடுக்க வேண்டும். சமூகத்துக்கு உதவி செய்பவர்களைத் தான் இந்தச் சமூகம் என்றும் மதிக்கும். எத்தகைய உயர் பதவிகளில் இருந்தாலும், சமூகத்துக்காக உழைக்காவிட்டால் அந்தப் பதவியால் எவ்விதப் பயனும் இல்லை. இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த நுண்கலையகமும், உங்களைப் படிப்புடன் மாத்திரம் சுருக்கிவிடாது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் உங்களது ஆற்றல்களை வெளிக்கொணரப் பெரிதும் உதவும், எனத் தெரிவித்தார்.





# நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து சேவைக்கு துரத தீர்வு அவசியம் என அனுர ஜனாதிபதி அனுரவிடம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை!



படகுகள் பழுதடைந்து, போக்குவரத்து சேவை பாதிப்பால் பல்வேறு இடையூறுகளை நாளாந்தம் எதிர்கொண்டுவரும் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து சேவையை சீராக கொண்டுசெல்ல அனுர ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக் காலமாக நெடுந்தீவு மக்களுக்கான கடற்போக்குவரத்து சேவையில் ஏற்பட்டுவரும் பல்வேறு இடையூறுகள் மற்றும் நெருக்கடிகள் அதற்கான தீர்வுகள் கிடைப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து கருத்து கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துக் கூறிய டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு மக்களிடம் இருந்து தமக்கான கடல் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பில நாளாந்தம் பல தோலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தகொண்டிருக்கின்றன. இந்த பிரச்சினை இன்று மட்டுமல்ல அன்று எமது ஆட்சிக் காலத்திலும் இருந்ததுதான்.

ஆனாலும் அன்று இவ்வாறான பிரச்சினைகள் வந்தபோது அதற்கான தீர்வுகளை நாம் உடனடியாக ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருந்தோம்.



குறிப்பாக தற்போது நெடுத்தீவின் போக்குவரத்து சேவையை பிரதான படகுகளான குமுதினி, வடதாரகை, நெடுந்தாரகை ஆகிய மூன்று படகுகள் மேற்கொண்டுவருகின்றன. ஆனால் அவை மூன்றும் தற்போது பழுதடைந்து திருத்த வேலைகளை எதிர்கொண்டுவருகின்றன.

இதேநேரம் நெடுந்தீவின் போக்குவரத்து சேவையை வீதி அபிவிருத்தி அதிகார சபையே முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக எமது ஆட்சிக் காலத்தில் பேருபொருளாக இருந்த இவ்விடையம், துறைசார் தரப்பினருடன் ஆராயப்பட்டதன் அடிப் படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையே தமக்கான கடமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தியதன் அடிப்படையில் அவர்கள் அதை ஏற்று இலவசமான போக்குவரத்து சேவையை இன்றுவரை முன்னெடுத்து வந்திருந்தனர்.

ஆனாலும் இன்று குறித்த மூன்று படகுகளும் பழுதடைந்து செயற்பாடற்று இருப்பதால் மாற்று வழியின்றி மக்கள் பல்வேறு அல்லல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்தவகையில் ஜனாதிபதி அநுரகுமார அவர்கள் இதில் தலையிட்டு கடற்போக்குவரத்து சேவைக்கு குறிப்பாக இந்தக் கடற்பரப்பில் சேவையை முன்னெடுக்கும் ஆற்றலுள்ள படகொன்றை வாடகைக்கு அமர்த்தி மக்களுக்கான சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருக்கின்றது.

அத்துடன் கடந்த காலத்தில் இவ்வாறான ஏற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் நான் நினைவூட்டுகின்றேன்.

அதேபோன்று கூட்டுறவுச் சங்கமும் "தேவா ரதம்" என்ற ஒரு படகு வைத்திருந்தது. அதுவும் தற்போது பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றது.

எனவே கொழும்பில் இருக்கும் தேசிய கூட்டுறவு சபையிடம் பரிந்துரைத்து செய்து குறித்த படகை திருத்துவதற்கான ஒரு கடனுதவியையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என நான் அனுர ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

அத்துடன் குறித்த கடனுதவி நெடுந்தீவு கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமல்லாது தீவக பகுதியில் இருக்கும் அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் தேசிய கூட்டுறவு சபையின் ஊடாக ஓர் இலகு கடன் உதவி கடைக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த டக்ளஸ் தேவானந்தா நிகழ்கால மற்றும் எதிர்காலங்களில் மக்கள் உணவு தட்டுப்பாடு அல்லது விலையேற்றத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பதால் தேசிய கூட்டுறவு சபையுடன் கதைத்து தீவக கூட்டுறவு சங்கங்களுக்கு இலகு கடன் கிடைக்கச் செய்வதனூடாக மக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் இலகுவாக கடைக்க செய்ய முடியும் என்றும் தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பத்திரிகையாளர்கள் லசந்த, பிரகீத் ஆகியோர் கொலைகளின் விவகாரங்கள் மீண்டும் "தூசு" தட்டப்படுகின்றன!

## மூடி மறைக்கப்பட்ட பழைய கோப்புகள் முழுமையான விசாரணைக்கு என்கின்றார் ஊடகப் பிரதி அமைச்சர்



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் விவகாரங்கள் உள்ளடங்களாக, கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்டிருந்த பாரிய குற்றங்கள் தொடர்பான பழைய கோப்புகள் அனைத்தும் மீண்டும் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ”படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் வழக்குகள் தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன.



கடந்த காலங்களில் இவ்வாறான பல கோப்புகள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. வெறும் பெயரளவில் மாத்திரமே விசாரணைகள் பற்றி பேசப்பட்டன. இவற்றுக்கு நீதி பெற்றுத்தருவதாக வாக்குறுதி வழங்கி சிலர் ஆட்சிப்பீடமும் ஏறினர். ஆனால், அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக, 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசு மலர்ந்த போது, இந்த நீதியை நிலைநாட்டுவதற்காகவே மக்கள் மிகப் பாரிய மக்கள் ஆணையை வழங்கியிருந்தனர். 2015 வரை நீடித்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் மீது மக்களுக்கு இருந்த கடுமையான அதிருப்தி மற்றும் கோபத்தின் காரணமாகவே அந்த மக்கள் ஆணை கிடைத்தது. ஏனெனில், அது ஒரு அடக்குமுறை அரசாகவே செயற்பட்டதுடன், மக்கள் பொது வீதிகளில் படுகொலை செய்யப்பட்டனர்.

முக்கியமாக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக உரிமைகள் பற்றி பேசும் அமைப்புகளிடம் நான் இப்போதும் கேட்கின்றேன், உங்களுக்கு அந்தக் கடந்த கால வரலாறு மறந்துவிட்டதா? பட்டப்பகலில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர், சிலர் நாட்டை விட்டு வெளியேறினர், சிலரது கை, கால்கள் உடைக்கப்பட்டன, வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவற்றுக்குச் சரியான முறையில் நீதியை நிலைநாட்டுவதற்கான மிக நெருக்கமான அதிகார பலம் நல்லாட்சி அரசுக்குக் கிடைத்தது. ஆனால், நல்லாட்சி அரசு அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு, பழைய பாதையிலேயே பயணிக்கத் தொடங்கியது.

அதேபோன்று, ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான மிகச் சிறந்த மக்கள் ஆணை நல்லாட்சி அரசுக்கு இருந்தது. ஆனால், அதிலும் அவர்கள் தோல்வியடைந்தனர். இதன் காரணமாக, மிகப்பாரிய சட்ட சீர்திருத்தங்களையும் நல்ல மாற்றங்களையும் கொண்டு வருவதற்கு கிடைத்த பல சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டன.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு மிகப் பாரிய பொறுப்பு இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். பல வருடங்கள் பழமையான குற்றங்கள் தொடர்பில் மீண்டும் ஆராய்வது என்பது இலகுவான காரியம் அல்ல. எனினும், இவற்றுக்கான நீதி நிச்சயமாக நிலைநாட்டப்படும்.” - என்றார்.

# இலங்கையிலேயே மிகச் சிறப்பாகச் செயற்படும் வட மாகாண சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள்!

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பாராட்டு

**- ந.லோகதயாளன்**



“இலங்கையிலேயே வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றார்கள். ஏனைய மாகாணங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின் போது, இவர்களது சேவையையே நாம் முன்னுதாரணமாகச் சுட்டிக்காட்டுகின்றோம்.” - இவ்வாறு இலங்கை அரசின் சிறுவர் நன்னடததை மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் களமட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அமைச்சருக்கு விரிவாக விளக்கமளித்தார். குறிப்பாக, சிறுவர் பராமரிப்புத் தொடர்பில் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் போதாமைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையான சிறுவர்களுக்கென பிரத்தியேகப் புனர்வாழ்வு மையம் வடக்கு மாகாணத்தில் இல்லாமையால், அவர்களைச் சான்றுபெற்ற பாடசாலைகளில் இணைக்கும் போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், உளநலத் தேவைப்பாடுடைய சிறுவர்களைப் பராமரிப்பதற்கென அரச சிறுவர் இல்லங்கள் இன்மையால் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், கைவிடப்பட்ட சிறுவர்களை அரவணைத்து வளர்த்தெடுக்கும் இப்பணியானது வெறும் தொழில் அல்ல, அது ஒரு மாபெரும் சமூகச் சேவை என்ற உணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.





சட்ட ரீதியான திருத்தங்கள் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில், 9 மாகாணங்களும் ஒன்றிணைந்து ஆவண ரீதியாக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகாலவரையில் வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் போதியளவு வழங்கப்படாமை குறித்துக் கவலை வெளியிட்ட அவர், இனிவரும் காலங்களில் இவர்களுக்கும் அத்தகைய பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் மற்றும் உளநலத் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேறும் இளைஞர், யுவதிகளுக்கான வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் இதன்போது சில முக்கிய ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாவல் திணைக்களத்தின் புள்ளிவிவரக் கையேடும், திணைக்களத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரால் முதன்முறையாகத் தமிழ்மொழியில் தயாரிக்கப்பட்ட “நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான கையேடும்“ அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# பாதாள உலகக் கும்பலுடனான தொடர்பு காரணமாக சிக்கிய கிழக்கு எஸ்.டி.ஐ.ஜியான உயர் பொலிஸ் அதிகாரி!

## சிஐடியின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் 1ம்திகதி அன்று புதன்கிழமை அன்று சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்ததன் பின்னர், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் ”கெஹெல்பத்தர பத்மே” என்பவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பிலான விசாரணைக்காகவே அவர் ஆன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவரிடம் முன்னெடுக்கப்பட்ட நீண்ட விசாரணையின் போது, தற்போதைய புலனாய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான வாக்குமூலத்தை வழங்கிய பின்னரே அவர் விடைபெற்றுச் சென்றுள்ளார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

# விக்டர் ராஜலிங்கம் அவர்கள் தன் பணி ஓய்விற்குப் பின்னரும் மொழி சார்ந்த ஆய்வுகளையும் எமக்கான சரியான அரசியல் தலைமையையும் நோக்கிய ஆர்வத்துடன் செயற்படும் ஒரு பற்றாளர் ஆவார்"

## ஸ்காபுறோவில்அவரது தமிழ் மொழி சாரந்த நூல் வெளியீட்டு விழாவில் அழுத்தமாகத் தெரிவிக்கப்பெற்ற விடயங்கள்













"எமது தாயகத்தில் பிறந்து, கல்வி கற்று பின்னர் அரச பதவியொன்றில் இணைந்து பின்னரும் உயர் கல்வி கற்பதில் ஆர்வத்தோடு ஈடுபாடு காட்டி தன்னை பல துறைகளில் வளர்த்துக் கொண்ட இன்றைய "விழா நாயகர்" விக்டர் ராஜலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் தனது குடும்பத்துடன் குடியேறி, அங்கு அரச பதவி ஒன்றில் அமர்ந்தபடி தனது இயல்பான ஆர்வத்தினை கைவிடாமல் இன்றும் ஒரு தமிழ்ப் பற்றாளராக தன்னை
அடையாளம் காட்டிய வண்ணம் தன் பயணத்தைத் தொடர்கின்றார். எனவே தான். தமிழ் மொழி சார்ந்த ஆய்வுகளையும் தமிழர்களுக்கான சரியான அரசியல் தலைமையையும் நோக்கிய தீவிர ஆர்வத்துடன் தொடர்ந்து தன் மொழி மீதான பற்றை வெளிக்காட்ட இவ்வாறான நூல்களை படைத்தும் தன் அரசியல் ஈடுபாட்டை காட்டும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்ற அமைப்புக்களோடும் அனைத்துல தமிழர் பேரவை போன்ற அமைப்புக்களோடும் தன்னை இணைத்துக் கொண்டு செயற்படுகின்றார்"

இவ்வாறு கடந்த 28-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ "குயின் பெலஸ்" விழா மண்டபத்தில் நடைபெற்ற "உலகின் மூத்த வாழும்
மொழி தமிழ் என்னும் அவரது தமிழ் மொழி சாரந்த நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய 'உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தெரிவித்தார்.

முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி நூல்வெளியீட்டு விழாவில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலந்து சிறப்பித்தார்கள். அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க விழாவின் தொகுப்பாளர் நாகராஜா ஜெயச்சந்திரன் அவர்கள் நேர்த்தியாக
விழாவை தொடர்ந்து நகர்த்திச் சென்றார்.

முதலில் நூல் பற்றிய அறிமுக உரையாற்றிய கவிஞர் மா. சித்திவிநாயகம் அவர்கள் தனது இயல்பானதும் ஆழமானதும் கவித்துவமான பாணியில் அழகுற பல விடயங்களை சபையோர் நெகிழும் வகையில் வழங்கிச் சென்றார்.அடுத்து நூல் அறிமுக உரையை மயூரன் சோமநாதன் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து உரையாற்ற அழைக்கப்பெற்ற ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களோடு விக்டர் ராஜலிங்கம் தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் தலைமை கிட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தோடு தன் இளவயதுக் காலம் தொடக்கம் இன்று வரை தேடலை நடத்தியவராக அதற்கான அமைப்புக்களோடு தன்னை இணைத்த வண்ணம் ஆர்வத்தோடு இயங்கிவருகின்றார் என்றார்
உரைகளுக்கு இடையில் பாடல்கள் மற்றும் நடனங்கள் இடம்பெற்றமை பார்வையாளர்களுக்கும் உரையாளர்களுக்கும் இதமான விடயங்களாகத் அமைந்தன.

தொடர்ந்து தலைமை உரையாற்றிய முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது தமிழ் மொழி சார்ந்த ஆய்வு நூல்கள் ஆயிரக்கணக்கில் வெளிவந்து கொண்டிருந்தாலும் அதன் தொடர்ச்சி வரவேற்கத்தக்கது என்றும் இந்த பணியில் தன்னை ஈடுபடுத்தியவண்ணம் மொழி சார்ந்த ஆய்வாளர்களையும் தன் பயணத்தில் இணைத்துக் கொண்டு விக்டர் ராஜலிங்கம் அவர்கள் ஆற்றும் சேவையானது, தமிழுக்கு அவர் செய்யும் கொடைபோன்ற ஒரு அர்ப்பணிப்புள்ள விடயமாகும் என்று தெரிவித்து தமிழ் மொழியின் தொன்மை பற்றிய சிறபபுக்களையும் எடுத்துரைத்து தலைமையுரைக் கேற்ப தன்பணியை நிறைவேற்றினார்.

அடுத்து "படிமுறைத் தமிழ் கற்பித்தல் திட்டத்தின்" நிறுவனர் சுப்பிரமணியம் ராஜரட்ணம் தனது வாழ்த்துரையில் தமிழ் மொழியைக் கற்றல் மற்றும் கற்பித்தல் துறையில் எமது இனத்தின் பின்னடைவைச் சுட்டிக்காட்டி தனது ஆதங்கத்தை வெளியிட்ட அவர் நூலாசிரியர் விக்டர் ராஜலிங்கம் அவர்களின் மொழி சார்ந்த மற்றும் அரசியல் சார்ந்த பங்களிப்பையும் போற்றினார்.

தொடர்ந்து நூலுக்கான ஆய்வுரை ஆற்ற அழைக்கப்பெற்ற பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள் விக்டர் ராஜலிங்கம் அவர்களின் நூல்வெளியீட்டுப் பணியில் தானும் நீண்ட காலம் பங்களித்து வருவதாகவும் அவரது முன்னைய நூலுக்கும் இந்த நூலுக்கும் அணிந்துரை எழுதும் பணியை தனக்கு அவர் அளித்ததாகவும் எனவே அவருடைய நல்ல நோக்கம். தேடிக் கற்கும் ஆற்றல் போன்றவற்றால் தான் கவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து நூலாசிரியரை வாழ்த்திச் சென்றார். தொடர்ந்து அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பட்டதாரியும் தமிழ் மொழி சார்ந்த ஆய்வுகளோடும் கற்றலோடும் கற்பித்தலோடும் தமிழ்ப் பணியாற்றும் சுகந்தன் வல்லிபுரம் அவர்கள் சிறப்பாக தன் ஆய்வுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து நன்றியுரையை பிரபல எழுத்தாளர் ரா. சம்பந்தன் அவர்கள் அனைவரினதும் இதயங்களை தொட்டுச்செல்லும் வகையில் ஆற்றி அமர்ந்தார்.

இறுதி உரையாக நூலாசிரியர் விக்டர் ராஜலிங்கம் தனது உரையில் தனது அரசியல் மற்றும் தமிழ் மொழிசார்ந்த பணிகள் மற்றும் தேடல் ஆகியவற்றில் தன்னுடன் ஒத்துழைத்து வரும் நூற்றுக்கணக்கானவர்கள் கனடாவில் வாழ்ந்து வருவதால் தனது நூல்வெளியீட்டு விழாக்களை கனடாவிலேயே நடத்த விரும்புவதாகவும் தனது துணைவியாரும் தன் செயற்பாடுகளில் ஒத்துழைப்பதாகவும் தெரிவித்து தன்னோடு தொடர்புகளைப் பேணி வரும் உறவினர்கள் மற்றும் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் போன்றவர்களின் அன்பும் ஆசியும் என்றும் தனக்கு கிடைக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்து தனக்கு இன்றை வெளியீட்டு விழா நம்பிக்கைகளை விதைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து நூலின் பிரதிகளை அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் மற்றும் சக இயக்குனர் சபை உறுப்பினர் உட்பட பலரும் பெற்றுச் சென்றனர்.

# தனிமை
# (நிலைமண்டில ஆசிரியப்பா)

----------------------------

*தனிமையின் தவிப்பு தள்ளாடும் வயதில்*
*இனியவள் இழப்பு இயலாக் காலத்தில்*
*கனிவான அழைப்புக் கனவாய்ப் போனபின்*
*இனியெது பிழைப்பு .இரவாய் ஆனபின்*
*ஆறுசுவை உணவு அவளுடன் போச்சு*
*ஆறுதல் வார்த்தை இறுதி ஆச்சு*
*தேறுதல் இன்றி திகைத்து நிற்கிறேன்*
*மாறுமா் வாழ்க்கை மரணம் வருமுன்?*
*வறுமைக் காலம் வலமாய் இருந்தாள்*
*சிறுமை வந்திடத் திடமாய் நின்றாள்*
*இறுதிவரை என்னுடன் இருப்பேன் என்றாள்*
*அறுதியாய் அமலனிடம் அவசரமாய்ச் சென்றதேன்?*
*பெற்ற பிள்ளை் பிரியம் காட்டலை*
*உற்ற துணையின்றி உறக்கம் வரவில்லை*
*சுற்றம் என்போர் சொத்தைக் கேட்டனர்*
*அற்ற குளத்து அறுநீர்ப் மீனானேன்*
*இல்லாள் அகத்திருக்க இல்லா தொன்றில்லை*
*எல்லாம் போனது எழிலரசி போனபின்*
*சல்லியன் இல்லாச் சகடம் போலானேன்*
*சல்லிபோல் நொருங்கி தனித்து நின்றேனே!.*

*குறிப்பு – – – 2020ம் ஆண்டு விலா கருணா நடத்திய*
*கவிதைப் போட்டியில்*
*இரண்டாம் பரிசைப் பெற்றுக்கொண்ட கவிதை.*

----------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453
Chandranvela07@gmail.com

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1578 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 3, 2026

# Singers Chinmayi and Andrea will be performing at a live concert 'Soul & Fire' in Toronto on Saturday July 4th



தமிழ்த்திரை உலகில் முத்தான காதுக்கினிய பாடல்களை வழங்கிய இரண்டு பாடகிகள் சிம்மை மற்றும் அன்றியா ஆகியோர் கலந்து கொள்ளும் பிரமாண்டமான **'Soul & Fire'** இசை நிகழ்ச்சி எதிரவரும் 04-06-2026 சனிக்கிழமையன்று..

300 **Water St, Whitby ON L1N 9B6** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **CANADA EVENT CENTRE** மண்டபத்தில் **"Soul & Fire"** இசைப் பிரமாண்டத்தில் இனிமையும் கலந்து அனுபவிக்க வாருங்கள் என அழைக்கின்றார்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.- அனுமதிச் சீட்டுக்களுக்கான இலக்கம் **Hot Line** 437 997 2307.

இங்கு காணப்படும் படங்கள் கனடா தினத்தன்று பாடகிகள் சிம்மை மற்றும் அன்றியா ஆகியோர் கனடாவில் தங்கள் ரசிகர்களை சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பெற்றவையாகும்.

**For Tickets: Hot Line 437 997 2307**

# "விக்டர் ராஜலிங்கம் அவர்கள் பணி ஓய்விற்குப் பின்பும் தமிழ் சார்ந்த ஆய்வுகள் – தமிழர்களுக்கான சரியான அரசியல் தலைமை நோக்கிய ஆர்வத்துடன் செயற்படும் ஒரு பற்றாளர் ஆவார்"

## ஸ்காபுறோவில்அவரது தமிழ் மொழி சாரந்த நூல் வெளியீட்டு விழாவில் அழுத்தமாகத் தெரிவிக்கப்பெற்ற விடயங்கள்



"எமது தாயகத்தில் பிறந்து, கல்வி கற்று பின்னர் அரச பதவியொன்றில் இணைந்து பின்னரும் உயர் கல்வி கற்பதில் ஆர்வத்தோடு ஈடுபாடு காட்டி தன்னை பல துறைகளில் வளர்த்துக் கொண்ட இன்றைய "விழா நாயகர்" விக்டர் ராஜலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் தனது குடும்பத்துடன் குடியேறி, அங்கு அரச பதவி ஒன்றில் அமர்ந்தபடி தனது இயல்பான ஆர்வத்தினை கைவிடாமல் இன்றும் ஒரு தமிழ்ப் பற்றாளராக தன்னை அடையாளம் காட்டிய வண்ணம் தன் பயணத்தைத் தொடர்கின்றார். (தொடர்ச்சி 22ம் பக்கம்)



# கனடாவின் 159வது பிறந்த தினக் கொண்டாட்டத்தில் விசேட அழைப்பின்பேரில் கலந்து கொண்ட "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன்

கனடாவின் 159வது பிறந்த தினக் கொண்டாடும் வகையில் இவ்வருடத்திற்கான "கனடா தினம்" கொழும்பிலுள்ள இலங்கைக்கான கனடிய தூதுவராலயத்தால் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. மேற்படி வைபவத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் இலங்கை அரசின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.

மேற்படி கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் **(Isabelle Martin)** அவர்களோடு உரையாடுகையில் கனடிய தேசத்திற்கான தனது வாழ்த்துக்களையும் தெரிவித்து தனது அண்மைய கனடிய விஜயம் தொடர்பான இனிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். (தொடர்ச்சி ம் பக்கம்)

# "பொற்சதங்கை கலைக்கூடத்தின் நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம்!



கனடாவின் "பொற்சதங்கை கலைக்கூடத்தின் நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 05-07-2026 ஞாயிற்றுக்கிழமையன்று **Meadowvale Theatre** மண்டபத்தில் நடைபெறுகின்றது.

6315 **Montevideo Road- Mississauga** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ,ந்த மண்டபத்தின் அழகிய மேடையில் தனது அரங்கேற்றத்தை எமக்காகப் படைக்கும் அபர்ணாவின் ஆற்றலையும் அவரது குருவின் கற்பிக்கும் திறனையும் அனுபவிக்க அன்றைய தினம் அந்த மண்டபத்தில் அனைவரையும் காண விரும்புகின்றார்கள். (தொடர்ச்சி ம் பக்கம்)

# CANADA DAY BBQ hosted by Scarborough Agincourt MPP Aris Babikian was graced by thousands of Supporters

# Scarborough Agincourt மாகாண தொகுதியின் அங்கத்தவர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின ஒன்றுகூடல்




**Scarborough Agincourt** மாகாண அரசு தொகுதியின் அங்கத்தவர் அரிஸ் பாபிகியன் நடத்திய கனடா தின ஒன்றுகூடல் கடந்த 28-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை 133 **Cass Avenue. Scarborough** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **LYNN-GATE PARK** பூங்காவில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் நலன் விரும்பிகளும் அங்கு கலந்து கொண்டு அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் உணவு உபசாரங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தனர். (தொடர்ச்சி 6ம் பக்கம்)